Registered as a Newspaper in Ceylon

சுதந்திரன்

EELANADU

மலர் 10
இதழ் 284

National Tamil Daily

தேசிய தினசரி

வெள்ளிக்கிழமை மலர் 10 இதழ் 284 கொழும்பு [21-11-68]

உத்தேச வேலை நிறுத்த எதிரொலி:

சகல அரசாங்க ஊழியருக்கும்

அடிப்படை சம்பளம் என்ன இருமடங்காக அதிகரிக்கும்?

மந்திரிசபை இன்று முடிவெடுக்கும்

கொழும்பு, வியாழன்

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களது அடிப்படைச் சம்பளம் நாணய நிதிப்புக் குறைப்பு அலவன்ஸ், பஞ்சப்படி, வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் ஆகிய சகலதையும் ஒன்றுசேர்த்து அதை அடிப்படைச் சம்பளமாக்கி அதிலிருந்து வென்ஷன் வழங்குவது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

நாளை நடைபெறும் மந்திரிசபைக் கூட்டத்தில் இது பற்றி முக்கியமான ஆராய்ச்சி நடைபெறுவதாக முன்னறிவித்தல் ஒன்றையும் அரசாங்கம் கொடுத்துள்ளது.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் அரசாங்க ஊழியர்களின் அடிப்படைச் சம்பளமும், பென்ஷனும் இப்போதிருப்பதிலும் பார்க்க இரு மடங்குகள் என்ற அடிப்படையில் தொகையில் அதிகரிக்கப்படுமென தெரிகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடு

வடபகுதி பொலிசாரும் செல்கின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்னமும் 28-ம் திகதி கொழும்பில் நடை பெறவிருக்கும் பொதுவேலை நிறுத்தத்தின்போது மாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வடபகுதியிலிருந்து 5 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 50 பொலிசாரும் 5 சப் இன்ஸ்பெக்டர்களும், 7 பொலிஸ் சார்ஜண்டுகளும் இம் மாதம் 27-ம் திகதி காலை கொழும்புசெல்கின்றார்கள்.

வேலைநிறுத்த வேளையில் போது தலைப்பட்டினத்தில் அசம்பாவிதமும் எதுவும் ஏற்படாமலிருப்பதற்கு வடமாகாணத்திலிருந்து தலைமைக்காரியாலயம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வடபகுதியிலிருந்தமட்டுமன்றி இலங்கையின் மற்றைய பகுதிகளிலிருந்தும் சுமார் 3000 பொலிசார் இவ்வார இறுதிக்குள் கொழும்பு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடபகுதியில் தாக்குமுகாம்களிலிருக்கும் இராணுவத்தினரும், கரைதார் வடிகைகளும், வடபகுதி பொலிசாரும் வேலை நிறுத்தநேரத்தில் மாதுகாப்பு வேலைகளை மேற்கொள்வார்கள். இந்த வேலையில் இலங்கை சகல ஆயுதப் படைகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸ் இராணுவ ஊழியர்கள் ஈடுபடுவார்கள்.

சகல மாதுகாப்பு வேலைகளும் கொண்டுவரப்படுவதற்காக தூர உத்தரவொன்றை பொலிஸ் தலைமைக் காரியாலயம் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டெண்டுக்கு அனுப்பி வைத்துள்ளது.

தமது நிலையத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களுமே வேலைநிறுத்தத்தில் இறங்கியிருப்பதாகக் கொடுத்த ஒரு தவறுக்குத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள சகல தபால் நிலையங்களிலும் இப்போது இரகசிய பொலிசார் கண்காணிப்புச் செய்துகொண்டு தொடங்கியுள்ளனர்.

(வ.நி)

இவர்கள் வேலை நிறுத்தம் செய்யமாட்டார்கள்

கொழும்பு, வியாழன்

இம்மாதம் 28-ம் திகதி வேலைநிறுத்தத்தில் இறங்கவிருந்த புகையிரத 'கிளார்க்'களின் தங்கள் வேலைநிறுத்தத் திட்டத்தைக் கைவிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது தலைமை அலுவலகம் [illegible]

குறிப்பிடத்தக்க தொழிற்சங்கத் தலைவர்களுடன் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வேலை [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

கல்வி அமைச்சருக்கு அமிர்தலிங்கம் கடிதம்

ஆளவெட்டி, வியா.

தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் பிரதம மந்திரியுடனும் கல்வி அமைச்சருடனும் இம்மாதம் 12-ம்திகதி நடத்திய பேச்சுவார்த்தையின் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவர உடனடியாக ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வீட்டுக்கோட்டை எம்.பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் கல்விஅமைச்சர் அவர்களைக் கேட்டுள்ளார்.

இச் சந்திப்பில் உடனடி நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய சில தீர்மானங்களை கல்வி அமைச்சர் அவர்களுக்கு திரு அமிர்தலிங்கம் நினைவூட்டியுள்ளார்.

இத் தீர்மானங்களில் வருமாறு:

தமிழ்ப்பாடசாலை தலைமை ஆசிரியர்கள் உத்தியோக மொழியில் தேர்ச்சிபெறத் தேவையில்லை. உத்தியோக மொழித் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து 55 வயதுக்குமேல் அவர்களின் சேவை நீடிக்கப்படும்.

தமிழ் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தமிழ் பாடசாலைகளுக்கு உத்தியோக மொழித் தேர்ச்சி தேவை என்ற நிபந்தனையிலிருந்து 55 வயதுக்கு மேல் சேவைநீடிப்புக் கொடுக்கப்படும்.

ரமழான் நோன்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை முஸ்லிம் மக்கள் நேற்று முதல் பிறை கண்டதுடன் தமது ரமழான் புனித நோன்பை ஆரம்பித்தனர்.

பகிஷ்கரிப்பு தமிழ் படிப்புக்கு ஆபத்தா?

சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சொத்தீட்டு சபையின் 321வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதற் பரிசு
19 N 0324 ரூ. 100,000

இரண்டாம் பரிசு
45 P 0371 ரூ. 40,000

மூன்றாம் பரிசு
31 X 0900 ரூ. 10,000

தலா ரூபா 788-80 சதம் பெறும் 100 மூக்கடுகள்.

40 S 0133	22 U 0189
11 S 0963	04 H 0900
34 X 0238	28 S 0878
33 Z 0904	18 D 0686
11 X 0773	21 S 0001
43 D 0838	13 G 0875

(8ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம், வெள்ளி பக்கபலமாக தமிழ் படித்துக்கொண்டிருக்கும் தமிழ்ப் பட்டதாரி மாணவர்களுக்கு தமிழ்ப் பாட நூல்களாவது குறைந்தது ஏற்பட்டிருக்கும் பொழுது தமிழ் படிப்புக்கே அவர்கள் ஒரு முற்றுப்புள்ளியைக்கும் ஆபத்து மாறியுள்ளதாக.

குறிப்பிடத்தக்க நூல்களே பரீட்சைக்கும் படிக்கமாறு இலங்கை கல்வி இலாகா பணித்துள்ளபோதும் அந்த புத்தகங்கள் இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்துமே அந்நிய செலாவணி உரிமைத் திட்டத்தின்கீழ் இலங்கைக்கு அனுமதிமறுக்கப்படுவதே இந்தக் கஷ்டத்துக்கு காரணமெனக் கூறப்படுகின்றது.

லெப்டினன்ட் திருக்கோவையார், பெரியபுராண

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

சிறுவணிக்கு

சொழும்புத்துறை-புகையிரத நிலைய வீதியில் தற்போது நிலத்தில் புதிதாகக் கட்டிய கந்தர் மாடிகளுடன்கூடிய முத்தையா-இரத்தினசிங்கம், இரத்தினம் லேன் 28/1 புகையிரத நிலைய வீதி, கொழும்புத்துறை. 345

இலிதெருசி 5ம் வாய்க்கால் கிழக்கில் 4 1/2 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்கு உண்டு. கொறி, மோட்டார் வாகனத்தில் செல்லக்கூடும். விபரம்: பிரி 62, புங்குடுதீவு. விற்கும் வரை தோட்டத்தில் இருக்கலாம். 348

வீடுகட்டி இருக்கவும், தோட்டம் செய்யவும் கூடிய 5 பரப்புக்காணி, நாவலர் வீதி, கல்லுத்தரை வீதிக்கு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு எஸ். திருச்செல்வம், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி. தொழுது, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 343

தேவை

அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற வர்த்தகரீதியில் மட்டுநிர்மாணிக்கும் வேலை பயிலுனருக்கு இடமுண்டு. ஊதியமுடன் இருப்பிடமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: செல்லம் வர்த்தகம், மூலஸ்தானம். 347

யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு வர்த்தகநிலைய முதலாளிக்கு வேறுமுறையிலான பொதுப்பேறில் நடத்த ஒருவர் உடனடித்தேவை. பதிவுசெய்யப்பெற்ற ஆறு தரிகளுடைய வர்த்தக தரிகளும், வரப்பிரமாணமும் உண்டு. விளம்பர இலக்கம் 346, சுழநாடு மேற்பாடு, யாழ்ப்பாணம். 346

மனேஜர்:

பத்து வருடங்களுக்கு மேலாக தொழில்நடத்தி கொண்டிருக்கும் மேல்நிலை பிஸினஸ்ட்டுக்குடிய மனேஜர் தேவை. நிர்வாகத்திறமை மேற்ற சம்பளம் வழங்கப்படும். முக்கிய தகுதிகள் சகிதமுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 163 மே. மா. சுழநாடு, யாழ்ப்பாணம். 168

வின்ஸர்

(புதிய கட்டிடம்) யாழ்ப்பாணம்.

தினசரி: 1-30, 6-30, 9-45. சனி, விசேஷம்: 10-30.

★ சிவாஜி கணேசன்
★ பத்மினி ★ K.R.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

இருமலர்கள்

பலகளி, றிசேவ்ட் ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.

கிறப்பிட்டல் பிளாஸா ஸைலன்

வெலிங்டன் விஜயா ராஜ

[யாழ்ப்பாணம்] [மட்டக்களப்பு] [நீர்கொழும்பு]

மற்றும் திரைகளில்

ரவிச்சந்திரன்

எல்.விஜயலக்ஷ்மி

மனோகர்

(இரு வேடங்களில்)

மணிமாலா

நடித்த

மொடேர்ன் தியேட்டர்ஸின்

எதிரிகள் ஜாக்கிரதை

மகத்தான 2-வது வாரம்

வெள்ளி

[கொழும்பு]

எம். ஜி. ராமச்சந்திரன் — சரோஜாதேவி நடித்த

பறக்கும் பாவை

யாழ்ப்பாண மாநகரசபை

கேள்வி அறிவித்தல்

பொதுசன நூலகநிலையத்திற்கு குளிர்தருகை (மின்விசிறி) பொருத்தல் மின் வசதிகளுக்கான அரசு முத்திரை பொறித்த கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் பதிவு பெற்ற மின்சாதனங்கள் ஒப்பந்தகாரரிடமிருந்து 30-11-1968 நண்பகல் 12-00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக, மாநகர ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேவைப்படும் விபரங்கள் யாவற்றையும் இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. ஏச். டீ பிறை,
மாநகர
மின்பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17-11-68. 1070

வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி 72/2ஆம் இல. சில வசதிகளுடன் வாடகைக்கு கொடுக்க ஆயத்தமாயிருக்கிறது. விரும்பியோர் நேரிலணுகவும். விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ஒ. குமாரசாமிப்பிள்ளை No. 120 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 339

'சுழநாடு'

10-வது ஆண்டு

நிறைவை யொட்டி

'சுழநாடு' ஸ்தாபனம்

நடாத்தும்

ஓரங்க நாடகப் போட்டி

தரமான இரு நாடகங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

1-வது பரிசு ரூபா 200
2-வது பரிசு ரூபா 100

ஒரங்க நாடகப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் படைப்புகளை 'சுழநாடு' இதழில் வெளிவரும் இதற்கான கூப்பனுடன் இணைத்து அனுப்பு தல் வேண்டும்.

முடிவு திகதி
30-11-68

ராஜ
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
காதல் பறவை

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 3 மணிக்கு
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
தேர்த்திருவிழா

24-ந் திகதி வரை
மாலிப்பாய்
வெஸ்லி இலிமா
தினசரி 6-30, 9-30
பிரி மோனை, மோனை 2-30
லெஜி - சரோஜாதேவி
நடித்த
பாலும் பழமும்
[தமிழில் டெப்பி]

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிமோனை, மோனை 2-30
சொஜி-சரோஜாதேவி
நடித்த
இருவர் உள்ளம்

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7&9-45p.m.
Rossana Podesta
in
HELEN OF TROY
[color]

சினிமா விமர்சனம்

எதிரிகள் ஜாக்கிரதை

தமிழ் திரைப்படங்களில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வேடம் தாங்கி நகைச்சுவை நடிகர்களுக்கு மட்டுமே முதலிடம் கொடுத்து வந்த 'திருடர்கள் ஜாக்கிரதை' நமக்கு தனி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அதோடு ஒப்பிடும்போது 'எதிரிகள் ஜாக்கிரதை' ஒரு வித்தியாசமான முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

இன்ஸ்பெக்டராக வரும் மனோகர் தன்னை கொல்ல வரும் கதாநாயகனை கொல்லாமல் மாற்று வேடத்தில் சென்று பிடிக்கும் வேளையில் அவரது நடிப்பு தரம் குறைந்திருக்கிறது. முழுக்கு மீசையுடன் அவர் முரட்டுத் தனமாகப் பேசும் போதும் கதாநாயகனை கொல்லும் போதும் தமது முழுத் திறமையை காட்டுகிறார்.

கதாநாயகனாக வரும் ஜெய்சங்கர் தனது பாத்திரத்தை நன்கு செய்திருக்கிறார். எஸ். விஜயலக்ஷ்மி மனோகரின் தங்கையாக வந்து ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெறுகிறார். அவரது நடிப்பும் கவர்ச்சியுடன் காதல் செய்வது இவர் முதல் படமாக இருக்கிறது. ஆனாலும் விஜயலக்ஷ்மி சோபிக்கிறார்.

மனோரமா மனோகரின் மனைவியாக வருகிறார். தமிழ் திரைப்படங்களில் நல்ல உடல் அமைப்பும் அசைவு முக பாவனைகளும் கொண்டவர்களில் இவரும் ஒருவர். இவர் நடிப்பில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நன்றாக வரலாம்.

நாகேஷ் தனது பாத்திரத்தை நன்கு செய்திருக்கிறார். அவரது நகைச்சுவை நடிப்பு ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கிறது. அவரது ஒவ்வொரு அசைவுகளும் ரசிகர்களை சிரிக்க வைக்கிறது.

இன்ஸ்பெக்டரை தவிர மற்றைய வேடங்களில் வரும் நடிகர்கள் தங்கள் பாத்திரங்களை ஓரளவு திருப்திகரமாக செய்திருக்கிறார்கள்.

இசை, பாடல்கள், ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, ஒலிப்பதிவு போன்றவை படத்துக்கு பலம் சேர்க்கின்றன.

மொத்தத்தில் 'எதிரிகள் ஜாக்கிரதை' ரசிகர்கள் பெற்றுவருகிறார்கள் என்பதற்கு மனோகர ஒரு சந்தர்ப்பம்.

மொடேர்ன் தியேட்டர்ஸார் தமது விருதுப்பாவனையான திரைப்படத்தை தமிழ் ரசிகர்களுக்கு 'எதிரிகள் ஜாக்கிரதை' மூலம் வழங்கியிருக்கிறார்கள். பொழுது போனது தெரியாமல் நல்ல பொழுதுபோக்கை 'எதிரிகள் ஜாக்கிரதை' இப்பொழுது யாழ்ப்பாணம் வெலிங்டனில் ஓடிக் கொண்டிருக்கிறது.

—ரமேஷ்

அச்சுவேலிசெய்திகள்

— நமது அச்சுவேலி நிருபர் —

வேலைகள் ஆரம்பம்

அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டை திறப்பு வைத்தற்கேற்ற நிலப்பகுதி தயாரிக்கப்பட்டு அதற்கேற்ற பூசனைகள் செய்யும் கைத்தொழில் பேட்டை அச்சுவேலி வடிவேற்றத்திடலில் நிறுவப்படவிருக்கிறது.

0 0 0

மகாவித்தியாலயம்

கடந்த 75 ஆண்டுகளாக அச்சுவேலி இறுப்பிட்டியில் வாழ் என்ற பெயருடன் இயங்கி வந்த கல்லூரி பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் விருப்பத்தின் இணங்க விக்னேஸ்வரி பகுதி மிசனால் அச்சுவேலி மகாவித்தியாலயம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

0 0 0

நிரந்தரம்

அச்சுவேலியில் இதுவரை தற்காலிகமாக இயங்கி வந்த பொலிஸ் நிலையம் இம்மாதம் 1-ந் திகதி தொடக்கம் நிரந்தர பொலிஸ் நிலையமாக்கப்பட்டுள்ளது.

0 0 0

உபதபால் நிலையம்

அச்சுவேலி மத்திய தபாலதிபர் குடியேற்றத் திட்டத்தில் உபதபால் நிலையமொன்றை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்பார்வை எம். பி. திரு. சி. சதாசிவலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

0 0 0

சர்க்கேடு

அச்சுவேலி பஸ் நிலையமும் சுற்றாடலும் அமைந்துள்ள பிரதான வீதியில் ஒரு மைல் முடி மிகுந்த சர்க்கேடான நிலையில் பாதசாரிகளும் வாகனங்களில் செல்பவர்களும் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

0 0 0

கட்டுப்பாடற்ற வீதி

சென்ற வருடபுரத்தில் உள்ள மக்கள் இந்து மயானத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்சார தகனமேடையை பாவிக்கும் போது மிகவும் உயர்ந்த தொகையை கட்டணமாக அறவிடுவதாக அறிகிறோம். இதனால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இதனை ஒரு கட்டுப்பாடான நிறுவனமாக நிர்வகிக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

0 0 0

பாதம் செல்லும் 'மன்னர்'

அச்சுவேலியைச் சேர்ந்த திரு. கி. நா. ஸ்ரீகாந்தா விஸ்வமடு விவசாயத் திட்டத்தில் விவசாயம் செய்வதில் முதலாம் இடத்தைப் பெற்று விவசாய மன்னராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இதற்காக அரசாங்கத்தின் சலுகைப் பரதம் செல்லவிருக்கிறார். இவர் கடந்த 3 வரம் தமிழ் மிருந்து விவசாயத் திட்டங்களில் பார்வையிட்டு வர். அடுத்த மாதம் முதல் பகுதியில் இவர் கடல் செல்லிருர்.

0 0 0

இரசாயன கோரிக்கை

அச்சுவேலிப் பகுதி இரசாயன சேவையாளராக கடமை யாற்றி வரும் திரு. ச. சோதைத்தரத்தை இங்கி ருந்து இடமாற்றம் செய்ய வேண்டாமெனவும் இட மாற்றத்தை ரத்து செய்யு மாறும் அச்சுவேலிக் இரசாயன சேவை தினசரி மொத்திலி சேரியுள்ளது தற்போ துள்ள சூழ்நிலையில் இவரது சேவை அச்சுவேலி மக்களுக்குத் தேவையென இரசாயனசேவை அமைச்சுக்கு தெரிவித்துள்ளதாக அறிகிறோம்.

—

திருப்பணி நிதி

யாழ்ப்பாணம், வெல்வி நாகபூசணி அம்மன் கோயில் திருப்பணி நிதி, நாவலர் கலாசார மண்டபம் ஸ்ரீ இராசேஸ்வரி ஆலயம் ஆகியவற்றுக்கான நிதிவசூல் தொகை 2976 ரூபா 17 சதமாகும். இத்தொகை ஏற்கனவே அறிவித்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காலனி' நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கும்படி போர்த்துக்கலுக்கு வற்புறுத்தல்

ஐ. நா. தர்மகர்த்தாக்கள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானம்

நியூயோர்க், நவ. 21

போர்ச்சுக்கல் அரசாங்கம் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் ஆபிரிக்க 'காலனி' நாடுகளுக்கு சுதந்திரம் வழங்க வேண்டு மென்று ஐ. நா. தர்மகர்த்தாக்கள் சபை வற்புறுத்தியுள்ளது.

ஆபிரிக்காவில் போர்ச்சுக்கல் தன் ஆதிக்கத்திலுள்ள தீர் வேண்டிருக்கும் 'காலனி' நாடுகள் சம்பந்தமாக பதினேழாவது சபையின் கவனத்தை சர்க்கும் தீர்மானம் ஒன்று ஐ. நா. காலனி ஒழிப்புக் குழுவில் கடைசியில் நிறைவேற்றப் பட்டது.

ஆபிரிக்காவில் போர்ச்சுக்கல் தன் ஆதிக்கத்திலுள்ள நாடுகளில் மக்களுடைய உரிமைகளை மறுத்து வருவதாகவும் அந்த நாடுகளுக்கு சுதந்திரம் வழங்க மறுத்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆபிரிக்க காலனி நாடுகளை விடுதலை செய்யும்படி போர்ச்சுக்கலை வற்புறுத்தும் தீர்மானத்தை ஆதரித்த 96 நாடுகளின் வாக்குகளில், 30 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இத் தீர்மானம் இனி பொது சபையில் விவாதத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

ஜோர்டான்—இஸ்ரேல்

மீண்டும் கைகலப்பு

அம்மான், நவ. 21

நேற்று ஜோர்டான் இஸ்ரேலிய துருப்புக்களுக்கு மீண்டும் கைகலப்பு ஏற்பட்டது. 15 நிமிடம்வரை நீடித்த இந்தக் கைகலப்பு மரணமாக ஏற்படவில்லை யென்று தெரிகிறது. இக் கைகலப்பை முதலில் ஆரம்பித்தது இஸ்ரேலே என்று ஜோர்டான் குற்றஞ்சாட்டி யிருக்கிறது.

பாலஸ்தீனியர்களுக்கு தலைநகர் தேற்ற நடந்த ஒரு சண்டையில் சுமார் 20 இஸ்ரேலிய துருப்பினர் கிழக்கு ஜெரூசலேம் டாங்கி செய்திகள் தெரிவிக்கின்றன.

காருவில்

விமானத் தளபதி கைது

சாரு, நவ. 21

சாரு விமானத் தளபதி நிடரேஸ் லாபுசெய்யப் பட்டுள்ளதில் வைக்கப்பட் டுள்ளார். அவருடைய இடத்துக்கு இப்போது கொரேருவர் நியமிக்கப்பட் டுள்ளதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில்

பிரிட்டிஷ் கொலம்பியாவில் அவசரகாலம்

லண்டன், நவ. 21

பெரும்பிரிட்டிஷ் கொலம்பியாவில் திடீரென ஏற்பட்ட வன்முறைச் செயல்களை காரணமாக அந்த மாகாண அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வன்முறைச் செயல்களில் பல உயிர்கள் பலி யாகி இருக்கின்றன என்று அந்நாட்டுப் பிரதமர் கூறி யிருக்கிறார்.

அமெரிக்காவில் ஏற்பட்ட

சுரங்கவிபத்தில் 78 பேர் புதையுண்டனர்

வாஷிங்டன், நவ. 21

அமெரிக்காவில் மேற்கு வேர்ஜீனியா மாகாணத்தில் ஏற்பட்ட நிலக்கரிச் சுரங்க விபத்தில் 78 சுரங்கத் தொழிலாளிகள் சுரங்கத்தின் அடியில் சிக்கி கொண்டதாக அஞ்சப் படுகிறது. நிலக்கரிக் கற்கள் இடிந்து முடிக் கொண்டபோது 81 தொழிலாளர் நிலத்தின் அடியிலுள்ள வேறு வழி களில் தப்பி ஓடி வந்து விட்டனர். இவர்களில் 13 பேர் உடனடியாக வேறு பாதுகாப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஏனைய சுரங்கத் தொழிலாளர் மீட்புதவிக்கான முயற்சியில் இன்னும் வெற்றி பெறவில்லை. பெரும் நிலக்கரிக்கு நெருப்பு எரிந்து கொண்டிருப்பதாலும் கூறப்படுகிறது.

மக்னமாராவுக்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

பொலிஸ் தடியடி: பலருக்குக் காயம்

புதுடில்லி, நவ. 21

டில்லியில் 'டக்டம்' விமானநிலையத்துக்கு வரும் மாணவர்களுக்கும் பொலி சாருக்குமிடையில் ஏற் பட்ட மோதலைத்தொடர்ந்து சுமார் 66 பேர் காயமடைந் தார்கள். 70 பேருக்குமேல் கைது செய்யப்பட்டார்கள்.

அமெரிக்கத்தூதுவர் திரு. மக்னமாராவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பலரே இந்தக் மோதல் ஏற்பட்டது. ஏனைய பகுதிகளிலும் எதிராக ஒரு சில மணிநேரம் மாணவர் ஊர்வலங்களும் இந்த ஆர்ப் பாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன.

டக்டம் விமானநிலையத்துக் கருகில் நடந்த கூர்ப்பாட் டத்தின்போது ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க பொலிசார் முயன்ற பொழுது கற்கள்வீசப்பட் டனவாம். இதைத்தொடர்ந் தது பொலிசார் தடியடிப்பிரயோகம்செய்தனர்.

பல்கலைக்கழகத்துக்குப் பொலிசார் அனுமதியின்றி தாங்களாகப் புகுந்து தாக் குதல் நடத்தியதில் இரு மாணவர்கள் காயமடைந்த தாக குற்றஞ்சாட்டப்பட் டது. மக்னமாரா முதலில் தான் பிரவேசிக்கவேண் டிய நிகழ்ச்சி உருவாகாது போனதாக பொலிசார் கூறினர்.

திரு. மக்னமாராவைக் கொலைசெய்வதற்காக நடை பெற்ற கிருத்துபரசாரத்தில் கலந்து கொள்ள மக்களை அழை உபதேசியார் வேண் முயன்றபோது, மாணவர் சிலர் அவரை அமர்த்தி அரை மணிநேரம் 'கேரோ' செய் தனர்.

உலக நாணய நெருக்கடி

பணக்கார நாடுகளின் நிதி மந்திரிகள் கூட்டத்தில் முட்டுக்கட்டை?

பொன், நவ. 21

சர்வதேச அடிப்படையில் உருவாகியுள்ள நிதிநெருக் கடியை சம்பந்தமாக ஆலோ சிக்க நான்கு பகுதிநாடு களின் நிதி அமைச்சர்களும் மத்திய வங்கி தலைவர்களும் நடத்திய கூட்டம் எந்தவித தீர்க்கமான முடிவும் எடுக் காமல் முட்டுக்கட்டையில் முடிவடைந்ததாக அறியப் படுகிறது.

மேற்கு ஜேர்மன் பொரு ளாதார அமைச்சர் தெரி வித்த கருத்தை மற்றும் கூட்டம் ஆராய்ந் ததாகக்கறப்படுகிறது. ஜேர்மன் சார்பை ஸ்திரப் படுத்துவதற்கு தமது நாடு எடுத்துள்ள நடவடிக்கை களை மேற்கு ஜேர்மன் பொருளாதார அமைச்சர் விளக்கினார்.

உலகமார்க்கட்டில் பிரஞ்சு பிராங்கு, ஸ்டேர்லிங் மார்க், பிரிட்டிஷ் டொலர் போன்ற நாணயங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி இந்தமாநாட்டில் உலகின் முக்கிய பத்து பணக்காரநாடுகளின் நிதி அமைச்சர்களும் ஆலோசிப் பார்கள் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், மேற்கு ஜேர் மனி, ஹொலந்து, பெல்ஜி யம், ஸ்வீடன், ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்களும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்வதாக இருந்தது.

இதற்கிடையில் உலகின் வெளிநாட்டு நாணயங்களைக் கையாளும் வங்கிகள் பலவும் நேற்று மூடப்பட்டிருந்தன. பிரஞ்சு பிராங்கின் மதிப்புக் குறைக்கப்படும் என்று எல் லாம் எதிர்பார்க்கப்பட்டது. பிரஞ்சு நிதி மார்க்கட் நிலை குறிப்பிடப்படாமல் நேற்று மூடப்பட்டது.

உலகநாணய நெருக்கடி தொடர்பில் இந்தியாவின் நிலை யும் ஓரளவுக்கு பாதிக்கப் படும் என்று புதுடில்லி வட்டாரம் ஒன்று கூறுகிறது.

இந்தியாவின் விண் வெளி ஆராய்ச்சி

ஆரம்பக்கட்டங்களை கடந்துவிட்டதாம்

புதுடில்லி, நவ. 21

இந்திய விஞ்ஞானிகளும் தொழில்நுட்பநிபுணர்களும் விண்வெளி ஆராய்ச்சித் துறையில் ஆரம்ப கட்டங் களைக் கடந்து விட்டார்கள் என்றும் துணிவாக நவீனக் கால ஆராய்ச்சிகளில் தாமே சுதந்திரமாக ஈடுபடக்கூடிய அளவுக்கு அவர்கள் முன்னேறி விட்டதாகவும் இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தின் தலைவர் திரு. விக்ரம்சாராபாய் கூறியிருக்கிறார். ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளைப் போலவே இந்தியாவும் தனது சொந்த ராக்கெட் ஏவுகணைகளை வடிவமைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய இறக்குமதி நிலையை இந்திய அரசாங்கம் விட்டது. ராக்கெட் ஏவுதல் புக்கு இந்தியாவிற்குத் தேவைப்படும் தளவாடங் களையே பயன்படுத்துகிறதென்றும் திரு. சாராபாய் கூறினார். விண்வெளியில் இன்னுமொரு ராக்கெட் தளம் நிறுவுதற் விருந்த ஆலோசனைகளும் பரிசீலனை செய்யப்படுவதாகவும் வரலாற்றில் சுமார் 170 மில்லியன் டாலர் செலவுக் கூடியதாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஐ. நா. தின விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஐக்கியநாடுகள் தினவிழா வும் பரிசுகள் வழங்கும் இன்று மாலை 5-30 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் ஜி. பீபீட்டர் தலைமையில்யாழ். நகரமண்டபத்தில் நடை பெறவிருக்கின்றது.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் பிரதிநிதி திரு. அன ரெலி குரேமோவ் கண்டிக் குளி கொள்ள விருக்கும் முக் கிய அதிபர் டாக்டர் செல்வி இ. ம. இன்பமலம். இன்பநாயகி சின னலைசுமி விருவுரையாளர் திரு. கு. கைலாசபதி, வட பகுதி கிராமாதிபதி திரு. சு. தண்டாயுதம் ஆகியோர் இவ்வைபவத்தில் சொற் பொழிவாற்றுவார்கள்.

கலந்துகொள்ளும், பட்டி மன்றமும் இடம்பெறும். திறமை பரிசுகளும் வழங்கப்படுவார். (வீ. தி.)

பிரதம மாளுவர்

பிரதம், நவ. 21

செக்கோஸ்லோவேக்கிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவராக திரு. டுப்செக்கின் தாராளக் கொள்கைகளுக்கு ஆதரவாக உள்ளுருப்பு வேறுபாடுகளுக்கு முடிவு கண்டு ஒற்றுமையுடன் செயற்படுவதற்கு இப்பொழுது முடிவுசெய் துள்ளனர்.

விசேஷ பூஜை

வெள்ளவத்தை, கிளை:

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பிறந்தநாள்வைய வத்தையொட்டி இன்னாள் 23ந் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை வெள்ளவத்தை சைவ மகாசபா மண்டபத்தில் விசேஷ பூஜைகளைபெறும். ஏழைகளுக்கு அன்னதான மும் வழங்கப்படும்.

பஹாய் இயக்க தூதுவர் விஜயம்

வெள்ளவத்தை, கிளை:

வெளிநாடுகளைச் சேர்ந்த பஹாய் இயக்கத்தூதுவர்க ளான டாக்டர் சங்கபூர் [ஆஸ்திரேலியா], திரு. ஒலிவர் [ஆபிரிக்கா] இருவரும் தற் பொழுது இலங்கை வந்து சேர்ந்துள்ளனர். இம்மாதம் 21ந் திகதி முதல் 24ந் திகதி வரை இவர்கள் வடபகுதி யிலுள்ள இடங்களுக்கும் விஜ யம் செய்து பஹாய் சொற் பொழிவுகளை நிகழ்த்தினர்.

அடுத்த மாதம் திறக்கப்படும்

பூநகரி, கிளை.

பூநகரி படித்த இளைஞர் முன்னேற்றச் சங்கத்தால் பூநகரி வாடியடியில் கட்டப் பட்டு முடியுற்றுள்ள வாசிக சாலை அடுத்தமாதம் பொது மக்களின் பாவனைக்கு திறந்து விடப்படும். 19-ந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதன் தலைவராக பொ. சிவராசமூர்த்தியும், செய லாளராக திரு. பொ. நல்ல நாதனும், பொருளாளராக திரு. தி. இரசரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மாறுபட்ட மனப்போக்குகளுக்கும் மாறுபட்ட வாணிகங்களுக்கும் ஏற்ப பல்வேறு சமயங்களும் இருக்கலாம். —மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சேவை லஷேஷம் கார்த்திகை மாதம் 7-ந்திகதி
[22-11-68]

வேலைநிறுத்த நிலைமை

இம்மாதம் 26-ந் திகதி பொதுவேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ள தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் பிரதம மந்திரிக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை. ஆயினும் நாங்கள் மக்களின் நலனைக் கருதி இருதரப்பினரும், புனராலோசனை செய்து ஒருநல்ல முடிவுக்கு வருவதற்கு, இன்னமும் இருக்கவும் சந்தர்ப்பம் இல்லாமல் போகவில்லை.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அரசாங்க ஊழியரின் சம்பள உயர்வுக் கோரிக்கையை பிரதமர் முற்றாக நிராகரித்துவிடவில்லை. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சம்பளக் கமிஷன் அறிக்கை வருமவரை பொறுத்திருக்கும் படியும் இப்போதுள்ள நிதிநிலைமையில் எதுவும் செய்ய முடியாதிருப்பதாகவும் மே மாதம்வரை அவகாசம் கொடுத்தால் அதன் பின் சம்பள உயர்வு கொடுப்பதில் சங்கடமிருக்கமாட்டாதென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். தனியார்துறை ஊழியரையும், கூலிருட்டம் உழைத்துப் பிழைப்பவர்களையும், வேலையற்றிருக்கும் படித்த வாலிபர்களையும்விட, இடைக்காலப் படிகளும் வழங்கப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்களின் நிலை அவ்வளவு மோசமானதல்ல என்பது பொதுமக்கள் மத்தியில் நிலவும் பொதுவான கருத்து. இந்நிலையில், இதுவரை வாழ்க்கைச் செலவு உயர்வுக் கஷ்டங்களைப் பொறுத்துவந்த அரசாங்க ஊழியர் அவசரப்படாமல் இன்னும் ஓர் ஆறு மாதகாலம் பொறுத்திருப்பதால் அதிககெடுதி நேர்ந்துவிடாது. அரசாங்கம் தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகளைக் கொண்டுவந்தபோது, அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் நடத்தும் பொறுப்பும் கடமையுமுடைய அரசாங்க ஊழியரே அதை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தபோதும் அதன் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் விஷயத்தில் தனித்தனியாக கவனம் செலுத்தி ஆவன செய்வதாகப் பிரதமர் தெரிவித்திருப்பதே இத்தொழிற் சங்கங்களின் முயற்சி வெற்றிபெற்றிருக்கிறதென்பதற்கு அத்தாட்சி. இதன்பின்னரும் உடனடியாக சம்பள உயர்வுகோரி வேலைநிறுத்தம் செய்வது அவர்கள் என்னதான் காரணம் கூறினாலும், உணவு உற்பத்தி இயக்கத்தின் வெற்றியை முறியடிக்கும் அரசியல் பின்னணியைக் கொண்டது என்று ஆளும் கட்சியினரின் பிரசாரம் வெற்றியளிக்க வாய்ப்பு ஏற்படுத்துவதாகும். அரசாங்க ஊழியர்களுக்கு குறைகள் இல்லாமலில்லை. அந்தக் குறைகளை நீக்கிக்கொள்ளவும் தமது உரிமைகளைப் பெறவும் வேலைநிறுத்தம் ஒரு மார்க்கமே தவிர, வேலைநிறுத்தம் செய்வதுதான் அரசாங்க ஊழியரின் உரிமையல்ல. அரசாங்க ஊழியர் என்பவர்கள் அரசாங்கத்தின் ஊழியர்களல்ல. பொதுமக்களின் ஊழியர்களே, எனவே அவர்கள் என்ன நடவடிக்கை எடுப்பதாயினும், பொதுமக்களின் நலனை எந்த விதத்திலும் பாதிக்காத முறையில் மேற்கொண்டால்தான் பொதுமக்களின் ஆதரவும் அனுதாபமும் ஒத்துழைப்பும் கிடைக்கும். அவர்களின் போராட்டமும் வெற்றி பெறும்.

இதேசமயம் அரசாங்கமும், அரசாங்க ஊழியர்களுக்கு, பொதுமக்களின் ஊழியர்களுக்கு உள்ள குறைநிறைகளை உணர்ந்து, அவர்கள் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவரச் செய்வதற்கு அவர்கள் திருப்தியுடன் வாழ வழிவகைகளைச் செய்யவேண்டியது அவசியம். அரசாங்க ஊழியர் அதிருப்தியுடனிருக்கும்வரை அரசாங்க நிர்வாக இயந்திரம் சீராக இயங்குவது கஷ்டம். பொதுமக்களின் தேவைகளும் நிறைவேற முடியாது.

எனவே, பொதுவேலை நிறுத்தம் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஐந்து நாட்களே இருந்தாலும் அரசாங்க சேவை அத்தியாவசிய சேவையென்பதையும், எந்த நிலைமையிலும் பொதுமக்களின் நலன் பாதிக்கப்படக் கூடாதென்பதையும் இருதரப்பினரும் உணர்ந்து, மீண்டும் சந்தித்துப்பேசி ஒரு நல்லமுடிவுக்கு வரவேண்டியதும் வேலைநிறுத்தத்தை தவிர்க்கவேண்டியதும் இன்றைய நிலையில் மிக மிக அவசியம்.

நவசீனாவுக்கு இடமில்லை?

மிகச்சிறிய நாடுகளும் உட்பட 126 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ. நா. ஸ்தாபனத்தில் 70 கோடி மக்களைக் கொண்ட நவசீனாவுக்கு இடமில்லை என்று பதினெட்டாவது தடவையாகவும் ஐ. நா. சபை மறுத்துவிட்டது. அமெரிக்காவின் பிடிவாதப் போக்கே இதற்குக் காரணம் என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஆனாலும் எத்தனை காலத்துக்கு எழுபது கோடி மக்களை உலகஸ்தாபனம் ஒதுக்கிவைத்து உலகில் அமைதியை நிலைநாட்டும் பணியை நிறைவேற்ற முடியும்? நவசீன விஷயத்தில் புதிய போக்கைக் கடைப்பிடிக்கப்போவதாகத் தெரிவித்திருக்கும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி நிக்ஸன் நவசீனாவை ஒதுக்கிவைக்கும் அமெரிக்கக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பாரென்று அமைதியை விரும்பும் உலகம் எதிர்பார்க்கிறது.

ஆசிய நாடுகளுடன் நவசீனா சுமுகமாக நடந்துகொள்ளவில்லையென்றும் இந்த நாடுகளின் உள் விவகாரங்களில் அது தலையிடுகிறதென்றும் ஐ. நா. வின் கொள்கைகளை அது உதாசீனம் செய்கிறதென்றும் இதனால்தான் ஐ. நா. வில் அதைச்சேர்க்கக் கூடாதென்றும் அமெரிக்காவும் மற்றும் சில நாடுகளும் தெரிவித்துள்ளன. நவசீனாவை வெளியே வைத்துக்கொண்டு எல்லைக் கட்டுப்பாடுகளை ஏற்று நடக்கவேண்டுமென்று கூறுவதால் பயனில்லை. அதைக் கட்டுப்படுத்தவேண்டுமெனில் முதலில் அதற்கு ஐ. நா. வில் இடமளிக்கவேண்டும். அதன் பின்னர்தான் அதைத் தட்டிக்கேட்க முடியும். எழுபது கோடி மக்களைக்கொண்ட ஒரு நாட்டை, அதுவும் ஓர் அணுவல்லரசாக வளர்ச்சி பெற்றுள்ள ஒரு நாட்டை ஒதுக்கிவைத்து உலகில் அமைதியை நிலைநாட்டலாமென நினைப்பது [illegible]

அவர்கள் பார்வையில்

'இலங்கைதமிழருக்குயோசனைகூற காமராஜருக்கு உரிமையில்லை'

உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறாராம்

சமஷ்டிக் கட்சியையும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியையும் இணைக்கின்ற முயற்சியில் சில தமிழ்த்தலைவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென்று இவர்கள் கருதுகிறார்கள். இதற்காக இரு கட்சிகளுக்குமான ஒரு பொதுத் தொண்டைத் [illegible] உருவாக்குவதாகத் தெரிகிறது. இச்செய்தி 'ஜனதா' இதழில் 14-11-68ல் வெளியாகியுள்ளது.

இம்மாதம் 15ம் திகதி 'ஸ்ரீலங்கா' இதழின் தலையங்கம் கூறுவதாவது: 'ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான ஒப்பந்தம்பற்றிய எந்தவிதமான விளக்கத்தையும் சமஷ்டிக்கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ கொடுக்கவில்லை. வருகின்ற பொதுத் தேர்தலின்போது இப்பிரச்னை பொதுமக்கள் முன் ஒரு கேள்வியாக எழுந்துநிற்கும்.

சமஷ்டிக்கட்சி தற்காலிகமாக அரசாங்கத்திலிருந்து விலகியிருக்கிறது. ஆனால் இப்பொழுது திருகோணமலையில் ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகத்தை விரைவிலே அமைத்துத்தர அரசாங்கம் இணங்கியிருக்கிறது. இவ்வாறான சமஷ்டிக்கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் விபரத்தை அறியும் உரிமை கேட்பதற்கு பொதுமக்களுக்கு உரிமையுண்டு.

இவ்வாறு கூறும் 'ஸ்ரீலங்கா' பிரதமரைத் [illegible] மாறிமாறி வந்த போக்கையும் [illegible] சிங்களநாடு நிலைத்திற்கும் ஒன்று என்று குறிப்பிடுகின்றது.

'லங்காதீப' 14ம் திகதி இதழின் தலையங்கத்தின் கருத்தாவது!

சிங்களத் தேர்தல் சம்பந்தமாக அரசாங்கம் சரியான நடவடிக்கை ஒன்றை எடுக்கவில்லை. மனித உரிமைகளை இழந்துள்ள மலைநாட்டு ஹரிஜனர்களின் பிரச்னையையும் இதே ரீதியில் தீர்க்க வேண்டும். உயர்ஜாதி தமிழர்கள் இவர்களை மோசமாக நடத்துகிறார்கள். அவர்களின்னும் பிறரும் இங்குள்ள கஷ்டங்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் இல்லை.

இது விஷயமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத் தலைவருடைய கடமையாகும். ஹரிஜனர்கள் வாழும் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் நிலைமைபற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கல்வி அமைச்சர் கோரியிருக்கிறார். அரசாங்கமும் முக்கியமாக கல்வியமைச்சரும் இதுசம்பந்தமாக விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று நாம் நம்புகிறோம்.

சென்னையில் அரசாங்கத் தொழிற்சாலையில் நடைபெற்ற தேசிய தொழிலாளர் யூனியன் 2-வது ஆண்டுவிழாவில் பேசிய செனட்டர் திரு. ஜினதாசநியபாலா, 'அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்கள் செய்யும் முயற்சி ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை. தொழிலாளர்களுடைய ஆட்சியொன்றை நிறுவுவதாகக் கூறி கடந்த முப்பது ஆண்டுகளாக இவர்கள் எடுத்த நடவடிக்கைகளில் தோல்வி கண்டதால் இப்பொழுது தமது சொந்த நலன்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தொழிலாளர்களுடைய தோள்களிலே சவாரிவிடப் பார்க்கிறார்கள்' என்று கூறியதாக 'தவச' 14ம் திகதிய இதழில் வெளியிட்டிருக்கிறது.

அவ்விதழின் தலையங்கம் 'சமஷ்டிக்கட்சியின் உண்மையான நோக்கம் இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களையும் இலங்கைத் தமிழர்களையும் இணைந்து ஒரு தமிழரசைத் தாபிப்பதே' என்று கூறுகிறது.

'சிறிலக்க' 14ம் திகதி வெளியிட்ட தலையங்கமாவது!

'இலங்கைத் தமிழர்கள் டட்லி சேனநாயக்காவினுடைய அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று தென்னிந்தியத்தலைவர் திரு. காமராஜ் கூறியிருக்கிறார். இந்தச் செய்தி ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன் இதழில் வெளிவந்துள்ள அதேசமயத்தில் அதே நிறுவனத்தின் ஆங்கிலப் பத்திரிகையில் அச்செய்தி வெளிவரவில்லை. இந்நிகழ்ச்சி ''ஏரிக்கரைப்'' பத்திரிகையின் இரட்டை வேடத்தைக் காட்டுகின்றது.

சிங்களவர்களின் உரிமைகளுக்காக சிங்கள இதழ்கள் பாடுபடும் அதேசமயம் சிங்களவர்களுக்கு எதிராக தமிழர்களின் உரிமைக்காக தமிழ் பத்திரிகை போராடுகின்றது. இச்செய்தியைப் பிரசுரித்துவிட்டு அதே சமயம் சிங்களவரிடமிருந்து அதை மறைப்பதற்கு ஏரிக்கரைக்கு எதுவித உரிமையும் இல்லை.

''இந்தப் பிரச்னை சம்பந்தமாக இன்னொரு கேள்வியும் எழுகின்றது. இலங்கைத் தமிழர்களுக்கு யோசனை கூறுவதற்கு காமராஜருக்கு உரிமை கிடையாது. இது இலங்கையின் சொந்தவிஷயத்தில் நேரடியாக தலையிடுவதாகும். ஆரம்பம்தான் இது. பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

''ஜனதின''வின் 14-ம் திகதி செய்திக்கொன்றில் சமஷ்டிக்கட்சி அரசாங்கத்தை இன்னும் ஏன் ஆதரிக்கிறீர்கள். எந்தக் கொள்கையின் மீது ஆதரிக்கிறீர்கள் என்று விளக்கும்படி சமஷ்டிக்கட்சியின் வாலிபர் இயக்கம் வற்புறுத்தியிருப்பதாகக் கூறுகிறது.

அமெரிக்காவ…

கென…
வி…

1960ம் ஆண்டு… அமெரிக்கமக்கள் ஜோ… எப் கென்னடியைத் த… ஜனாதிபதியாகத் தெ… தெடுத்தபோது உலகத்… வர் ஒருவரைத்தான் … வாக்கி விட்டதாக … பெருமிதம் அடை… சென்ற … கூறல்… லில்லை. கென்னடியின் பெ… ஜனநாயக உலகில் ம… தான சாதனை என … றைய அமெரிக்க மக்க… அல்லது மற்றைய நா… தலைவர்களோ புரிந்த… விட்டனர் என்றே கூற… இந்தத்தலைமுறையில் … ந்து எடுக்கப்பட்ட … இளம் ஜனாதிபதி என… கின்; முதல் கத்தோலி… ஜனாதிபதி என்றோர் … அடிப்படை உரிமைக… காக வருத்தி ஏமி… போரில் இரங்கசரி என்… கின்; உலக உத்தம ஜ…

இ.போ.ச. அதிகாரிக…
ஒரு வேண்டுகோள்

அநுராதபுரத்திலிருந்து மதவாச்சிக்கு அப்பால் … வவுனியாவரைக்கும் செல்… பிரயாணிகள் தினமும் … 5-30 மணியிலிருந்து இ… 9-15 வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது.

இவ்விதக் கஷ்டத்தை… குவகையில் மதவா… வரைக்குமசெல்லும்பஸ்… வவுனியாவரை செ… திரும்புவதற்கான ஏற்… டை இ. போ. ச. அதி… கள் மேற்கொள்ளு… கேட்டுக்கொள்கிறேன்.

செ. சற்குருநா…
வவுனியா.

ஆசிரியருக்கு கடிதங்கள்

சாராய ஆலை எதற்கு? வேறு வழிகள் இருக்கின்றனவே

யாழ்ப்பாணத்திலே ஒரு புதிய சாராய உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவும் நோக்கம் இருப்பதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தி, தமிழ் மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கவே செய்யும்.

மாவட்டசபை நிறுவும் கோரிக்கை, கோணேசர் ஆலயப்பிரதேசத்தை புனிதநகரமாக்கவேண்டுமென்னும் இந்துமக்களின் கோரிக்கை, யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்னும் கோரிக்கை முதலியவைகளை மறுப்புக்காட்டிய ஆட்சிபீடம், யாழ்ப்பாணத்தில் சாராய உற்பத்திச்சாலையை நிறுவுவதில் ஆர்வமான அக்கறை காட்டுவது, வெள்ளாடு நனை இறதென்று வேங்கைப்புலி அழுத கதையைத்தான் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறது.

இன்று யாழ்ப்பாணத்தில், [illegible] ஓரளவிற்தான் [illegible] நிற்கிறது. அந் நிலையே, தமிழ் சான்றோர் மனதில் வருத்தத்தையும் அதிருப்தியையும் உண்டு பண்ணுகிறது. அப்படியிருக்கும்பொழுது இக்கேவல சாராய உற்பத்திச்சாலையை நிறுவினால், நிலைமை எவ்வாறிருக்கும்? இன்றைய சந்ததிக்கும், இனிவருஞ் சந்ததிகளுக்கும், இதனால் விளையும் பெரும் கேட்டிற்கோர் அளவிராது.

அந்நிய ஆட்சியிலேயே ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உயர்தரமுள்ள கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டுத் தமிழரின் மதியையும், கல்வியையும், பண்பையும் பெருக்கினார்கள். அதன் பெறுபேறுகள்தான். எத்தனையோ மதிநுட்பம் வாய்ந்த உண்மைப் பெரியோர்களை ஈழத்தாய் பெற்றாள். இப்பொழுது, சாராய உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவி, தமிழரின் மதியையும், மதிப்பையும் பறிகொடுக்கச் செய்யவா இத்திட்டம்? ஆறுமுகநாவல…ர் பெருமானுக்குச் … நாட்ட … யும் இந்து… வாணத்தில் சாராய உ… நிசாலை நிறுவவேண்… அது பாருடைய ஞான… மாகத் திகழ இருக்கி… புத்தபகவான் உபதேச… பஞ்சசீலத்தில், மதுவி… இடம்பெறவில்லையா? … சீலத்தை அனுஷ்டி… முறை இதுதானா!

தொழிலாளருக்கு … வாய்ப்பு அளிப்பது … யாழ்ப்பாணத்தில் … தொழிற்சாலைகள் … கள் நிறுவப்பட வேண்… ஆலை, சாராய உற்… சாலையல்ல. … லிருந்து, வெல்லம் கல்… காரம்செய்யும் ஒரு தொ… சாலை இவ்விடம் உ… வாக நிறுவலாம். தொழிற்சாலையில், பழத்திலிருந்து தயா… கூடிய:

1 பனம்பழ ஜாம் அ… ஜெலி.
2 பனம்பழச்சாறு.
3 பனம்பழ ரொபி… தை இனிப்பு.

முதலிய … பெருமளவு தயாரிக்க… மதுவைப் பெ… நோக்கத்தை கவி… வேண்டியது பொ… இலங்கையிலுள்ள எ… சான்றோர்களின் க… இப்பொழுது கொண்… இருக்கும் இடத்தி… யாழ்ப்பாணமக்கள் … வன்மையான எதிர்ப்… காட்டவேண்டும்.

த.பகவத…
சந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரிக்காவின் 35 வது ஜனாதிபதியான ஜோன் எப். கெனடி மறைவுதினம் இன்று

...கனடி-வரலாற்றுத் தேவைக்காக விசேஷமாக அனுப்பப்பட்டவர்

...ம் ஆண்டில் ...மக்கள் ஜோன் ...ழையைத் தமது ...ாகத் தெரிந் ...ாது உலகத்தை ...ரைத்தாக் உரு ...விட்டதாக அன்று ...ம் அடைந்தா ...கூறுவதற் ...கனடியின் வெற்றி ...உலகில் மகத் ...தனை என அன் ...மெரிக்க மக்களோ ...மற்றய நாட்டுத் ...ளோ புரியத்தவறி ...என்றே கூறலாம் ...ஞறையில் தெரி ...க்கப்பட்ட மிக ...ஜனாதிபதி என்றோர் ...தற் கத்தோலிக்க ...என்றோர் சிலர்! ...ட உரிமைகளுக் ...ருந்தி ஏங்கிநித் ...இரக்கசர் என்றோர் ...கை உத்தம ஜனாதி

...ச. அதிகாரிகட்கு ...வெண்டுகோள்

...தபுரத்திலிருந்து ...க்கு அப்பால் வவ ...ரக்கும் செல்லும் ...கள் தினமும் மாலை ...ணியிலிருந்து இரவு ...ர காத்து நிற்க ...ருக்கிறது.

...கஷ்டத்தை நீக் ...யில் மதவாச்சி ...செல்லும்பஸ்ஸை ...வரை சென்று ...தற்கான ஏற்பாட் ...போ. ச. அதிகாரி ...மேற்கொள்ளுமாறு ...கொள்கிறேன்.

...சி. சற்குருநாதன் ...ர.

...பகுமானுக்குச் சிலை ...ஆயத்தங்கள் செய் ...வேளையிலா, வாழ்ப் ...ல் சாராய உற்பத் ...நிறுவவேண்டும்! ...டைய ஞாபக சின் ...நிகழ இருக்கிறது? ...வாள் உபதேசித்த ...த்தில், மதுவிலக்கு ...றவில்லையா? பஞ்ச ...அனுஷ்டிக்கும் ...இதுதானா!

...ளருக்கு வேலை ...அவிப்பதற்கு, ...ணத்தில் அநேக ...ச்சாலைகள் கட்டா ...ுவப்பட வேண்டும். ...சாராய உற்பத்திச் ...ு. ...ளை ...வெல்லம் கல்லாக் ...செய்யும் ஒருதொழிற் ...இவ்விடம் உடனடி ...நிறுவலாம். அதே ...ச்சாலையில், பனம் ...லிருந்து தயாரிக்கக்

...ம்பழ ஜாம் அல்லது ...ல்லி.

...ம்பழச்சாறு.

...ம்பழ ரொபி அல் ...இனிப்பு.

...ய பண்டங்களைப் ...வு தயாரிக்கலாம்.

...வம் பெருக்கும் ...த்தை கண்டிக்க ...யது பொதுவாக ...யிலுள்ள எல்லாச் ...ர்களின் கடமை. ...ழுது கொண்டுவர ...ம் திட்டத்திற்கு, ...ணமக்கள் தங்கள் ...மான எதிர்ப்பைக் ...வேண்டும்.

து. பகவதாஸ்

...ர்மடம்,

...ப்பாணம்.

பொதுவாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர்

...பதியாகிய ஆபிரகாம்லிங்கனின் மறு பிறவி என்றோர் சிலர்; மிடுக்குவாய்ந்த மிரட்டல்காரன் குருஷ்சேவுக்கு இந்த இளவல் எம்மாத்திரம் என அலுத்துக்கொண்டோர் சிலர். அமெரிக்க முதலாளித்துவ வீணையின் பழைய கருதியே மல்லாது வேறொன்றுமில்லை எனக் குருஷ்சேவும் இறுதியாகத் தீர்த்துக் கட்டி விட்டார். இத்தனை கணிப்புகளின் மத்தியில் தனக்கே உரித்தான மனநிறைவுடனும் வைரக் பாய்ந்த நம்பிக்கையுடனும் கெனடி வெள்ளை மாளிகையை யடைந்தார்.

கெனடியைப் பொறுத்த மட்டில் ஜனாதிபதி பதவியை பேற்றுச் சுமார் ஒருவருடத்துக்குள்ளேயே அவரிடம் அசாதாரண ஆற்றல்களையும், அரசியல் போக்கியதை களையும் ஆதரவாளர்கள், விரோதிகள் நடுநிலைமையை நாட்டினர் கண்டு நெருங்கி உறவாட முந்திக் கொண்டனர். சமாதான சகவாழ்விற்காக வருந்திக் கெடுத்த உலகத்திற்கு கெனடியிடம் அபயம் கிடைக்கலாமென பெருமளவு நம்பப்பட்டது. அதில் உலக யுத்தத்திற்கு ஏற்ற மிடுக்கை ஆண்டு நோறும் பலப்படுத்துவதிலும் பார்க்க அதில் உலக சமாதானத்திற்கு வாய்ப்பான புதிய, உறுதியான வழிகளைத் திறப்பதற்கு மனித விவேகத்தைப்பயன்படுத்தும் மகத்தான சாதனையை நாட்டுவதற்கு உரிய சோதனைகளில் கெனடி ஒருவரே அபாரமான வெற்றிக் குரியவராவர். அமெரிக்க தலைமைப் பீடத்தின் கெடுபிடிப்போர்க்கினைத் தளர்த்தி தெய்வீகப் பணிபுரிந்தவர் கெனடி.

1960-ல் கெனடி அவர்களும் அண்மையில் ஜனாதிபதியாகத் தெரிவுப்பட்ட நிக்ஸன் அவர்களும் போட்டியிட்டபோது "இருவரும் ஒரு சோடியிலுள்ள சம்பாத்துகள்; சிறந்தது இடதா?" வலதா? என்ற அளவிற்கு ஆரம்பத்தில் கெனடியை மதிப்பிட்ட குருஷ்சேவ் ஓர் ஆண்டுக்குள் கெனடியைச் சந்திப்பதில் ராஜியவிவேகம் உண்டு என்ற கணிப்பினால் உந்தப்பட்டார்! இந்த ஆவலுக்கு முன்னோடியாகக் கெனடியை வாழ்த்தி மனப்பூர்வமான செய்தியை அனுப்பிவைத்த தோடல்லாமல் ரூசிமாவில் வேவு பார்த்துச் சிக்கிச் சிறைபட்ட 2 அமெரிக்க விமான வீரர்களை விடுதலை செய்து தாயகம் அனுப்பினார்.

மேற்கத்திய நாடுகளுக்கு ரஷ்யா மீது இருந்த துவேஷத்தையும், சந்தேகத்தையும் போக்கடித்த முதற் பெருமையும் சாதனையும் கெனடிக்கே உரித்தானதாகும். ஸ்டாலின் 2-ம் உலகப் போர் வேளையில் நேச நாடுகளை மதித்து அவற்றுடன் ஒத்துழைத்து உலகத்தை நாசிசப் போராபத்திலிருந்து மீட்ட பின்னர் மேற்கு வல்ரசுகளுக்கும் ரஷ்யாவிற்குமிடையில் உறவுகள் சிதறுண்டு கெடுபிடிகள் விசாலமாகிக் கொண்டு போயின. இத்தருணத்திலிருந்து வல்லரசு இலக்குகள் இரு முகாம்களாக அணி வகுத்துக்கொண்டன. இரு முகாம்களின் அடிப்படை இலக்குகள், வரலாற்றில் 19-ம் நூற்றாண்டுதொட்டு இருப்பது போன்ற, வல்லரசு சம்பலத்திற்கே என்றி ஒன்றையொன்று அழித்துக் கொள்ளவல்ல. ஆனால் கெனடி காலம்வரை வல்லரசுகள் ஒன்றையொன்று நேர்மையாகப் புரிந்து கொள்ளாததால் பயங்கரக் கெடுபிடிகளுக்குத் தங்களைத் தயாராக்கி கொண்டன. இந்தக் கெடுபிடியுகம் கெனடி-குருஷ்சேவ் சந்திப்பின் சமூகமான விளைவால் கட்டுப்படுத்தப்பட்டு இன்று உலகம் சற்று ஆறுதல் பெருமூச்சுவிட வாய்ப்புப்பெற்று விட்டது. அமெரிக்க ரஷ்ய நல்லுறவையும் நெருங்கிய விளக்கத்தினையும் இன்று அவதானிக்கும் மேற்கு நாடுகளுக்கு வெகு ஆச்சரியமும் சீனாபோன்ற நாடுகளுக்கு வலிமையான குரோதவணர்வுகளும் ஏற்படுகின்றன. இந்நிலை ஏற்பட்டதால் உலக சமாதானத்திற்குப் பங்கம் இனிமேல் அண்மையில் இல்லை எனத் தோன்றுகின்றது. இச்சாதனை கெனடியைச் சீரஞ்சீவியாக்கியது என்றே இத்தருணத்தில் அறுதியிட்டுக் கூறவேண்டியிருக்கின்றது.

கெனடி முன்னேற்றம் தரத்தக்க சகல மாற்றங்களையும் ஆதரிக்கும் ஓர் தலைவர். 1960-ல் அமெரிக்கர் இவரை அதற்காகவே வெள்ளைமாளிகைக்கு அனுப்பிவைக்கவிரும்பினர். சௌட்டராக இருக்கும் போது அல்ஜீரிய நாட்டினரின் சுதந்திர இலக்கத்தினை ஆதரித்ததால் அன்று பிராஸின் நட்பிற்குச் சிறு குந்தகம் ஏற்படுத்தினார். எனினும் அவர் கலங்கவில்லை. காலனி நாடுகள் சுயாதீனத்துக்காகப் போராடும்போது மனப்பூர்வமான ஆதரவும் உற்சாகமும் கொடுத்ததால் போர்த்துக்கல் போன்ற காலனி அரசுகளின் வெறுப்புக்குள்ளானார். இருந்தும் அவர் தளரவில்லை. அதுவும் காலனி நாடுகள் சாந்தமான வழிகளில் சுயாதீன வேட்கை கொண்டிருப்பின் கெனடி விடுவாரா?

ஆக அவருக்கு அளித்த ஆண்டுகள் மூன்றே மூன்றாகும். இக்கால எல்லைக்குள் அமெரிக்க நாட்டு இனப் பிரச்சனைகளையும், இனத் தொடர்புகளையும் கென்னடி தனது தயாலாகிறையாலும், சாதுர்யத்தாலும் புதிய சகாப்தத்திற்குத் திருப்பி விட்டார். மிக விஷேசமாக சோவியத் நாட்டுத் தொடர்பிலும், லத்தின்-அமெரிக்கப் பகுதிகளின் உறவுகளிலும் ஆச்சரியப்படக் கூடிய இலக்குகளை நோக்கி அமெரிக்காவை இட்டுச் சென்றார். உள் நாட்டு விவகாரங்களில் மிகக் குறிப்பாக சிவில் உரிமைகள் விடயமாக சமஷ்டி அரசாங்கம் என்றுமில்லாத அக்கறையும் உத்வேகமும் காட்ட வழி வகுத்தார்.

வரலாறும், எதிர்கால சந்ததியும் அவர் எவ்வாறாக நவீன சக்திகளின் பிரதிபலிப்பாக விளங்கினார் என்பதை மதிப்பிடுவதிலேயே பேரக்கறை கொண்டுள்ளன என நம்பப்படுகின்றது. கென்னடி பொது வாழ்விற்கும் அதனைச் செயல்படுத்தவல்ல வழிவகைகளுக்கும் ஓர் அரிய இலக்கணத்தை வகுத்துச் சென்று விட்டார். அவரது தூய விஸ்வாசத்தாலும், திறமையாலும், மன நிறைவாலும் அமெரிக்க நாட்டுப் பொதுச் சேவைக்கும் அரசியல் கருமங்களுக்கும் பலரைக் கவர்ந்து ஈடுபடுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுசன தொண்டில் அமெரிக்க அரசு பொதுவாக சீரிய கிரத்தை காட்டாது இருந்த நிலையினைக் கென்னடியும் பெருமளவிற்கு மாற்றிவிட்டது. சந்தேகம் அவநம்பிக்கை குடி கொண்ட யுகத்தில் வலிமையான நம்பிக்கையை நிலைநாட்டி, தனிப்பட்ட லாபகரமான வாழ்க்கை நெறிவினை பொது வாழ்க்கைநெறியாக மாற்றி அமெரிக்க நாட்டில் புதிய திருப்பத்தினை ஏற்படுத்திய பெரியார் கொன்னடியாவர்.

மனித இனத்தில் கென்னடிக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. சமாதானமும் சகவாழ்வும் கென்னடியின் இலட்சியங்களால் அப்பம் பெறுமென உலகத் தலைவர் நம்பத் தொடங்கி விட்டனர். இன்னும் சில ஆண்டுகளில் அமெரிக்கர் மத்தியில் கென்னடி ஓர் காப்பியத் தலைவராகி விடுவார் என நம்புவதற்கு பல அறிகுறிகள் ஏற்படுகின்றன, ஆனால் அவர் வரலாற்றின் தேவைக்காக விசேடமாக அனுப்பப்பட்டவர் என்று கணிபதே மிகப் பொருத்தமாகும்.

எம். ரி. சிவம் பி. ஏ.

பொலிஸார் தேடுகின்றனர்

சங்கானை, வியா.

இளவாலையைச் சேர்ந்த சூசை மரியான் கத்திவெட்டிற்கு இலக்காகி காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரைக் கத்தியால் தாக்கியதாகக் கூறப்படும் செல்லத்தம்பிதிருச்செல்வம் [illegible] பொலிசார் தேடியருகின்றனர்.

வாழ்வில் பிரிந்தவர் சாவில் சந்தித்தனர்

இமையாணன், வியாழன் மனைவி இறந்து 12 மணி நேரத்துக்குள் கணவரும் காலமானார். இச்சம்பவம் உடுப்பிட்டியில் நிகழ்ந்துள்ளது.

சென்ற 15-ந் திகதி அதிகாலை உடுப்பிட்டியைச் சேர்ந்த மீனாட்சிப்பிள்ளை (58) என்பவர் நோய் காரணமாக இறந்தார். இவரது இறுதிக்கிரியைகளை மயானத்தில் நடத்திவிட்டு வீடு வந்த இவரது ஒரே மகன் தனது தந்தையான சின்னத்தம்பி செல்லையா 60 வின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றார். தாய் காலமான 12 மணி நேரத்தில் தந்தைக்கும் இறுதிக் கடமைகளைச் செய்யவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

இறந்த இருவரும் சுமார் பதினைந்து வருட காலமாக பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும் மனைவிக்கு செல்லையா ஜீவனாம்சம் கட்டும்படி நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகம்

அச்சுவேலி, விழாவன்

தற்போது ஜெர்மனியிலிருந்து உருளைக்கிழங்கு ஏற்றிக் கொண்டு கொழும்புத் துறைமுகத்தில் வந்திருக்கும் கம்பலிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதியானதும் வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு விதை விநியோகிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 24, 25, 26-ம் திகதிகளில் பகுதியில் விதை கிழங்கு விநியோகிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

[11ம் கலத்தொடர்ச்சி]

இதைக்கேட்டதும் ராஜ்மோகன்சற்றே மௌனமாக இருந்து, 'மனிதரால் முடியாதது தெய்வத்தால் முடியும். தமிழ்த் தலைவர்களிடையிலும் இலங்கையிலும் ஒற்றுமைஏற்பட ஆண்டவன் அருள்செய்வார்' என்றுநம்பிக்கையுடன் தெரிவித்தார். அவர்கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல பல தமிழ்த் தலைவர்களை மட்டுமன்றி, மற்றத் தலைவர்களையும் கண்டு பேசியுள்ளார்.

இந்த நம்பிக்கை நிறைவேறுவது அவ்வளவு சுலபமல்லத்தான். ஆனால் எல்லாம் வல்ல தெய்வம் மனம்வைத்தால் எது தான் முடியாது? நம்மில் ஒவ்வொருவர்களதிலுமுள்ள அந்த தெய்வம் நம்மில் பலரது மனதையும் சிறப்பாக பல அரசியல் கட்சித் தலைவர்களின் மனதையும் மாற்றி, சுயநலம், வெறுப்பு, கசப்பு முதலியவற்றை அகற்றி. அன்பையும் தியாக புத்தியையும் வளர்த்தால் ராஜ்மோகன் கூறுகிறபடி இலங்கை, உலகத்துக்கே வழிகாட்டும் ஒரு நாடாவதின் மாறமுடியாது?

ஐயாறன் எழுதுவது

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக மகாத்மா காந்தியை இலங்கைக்குவருமாறு அழைத்த யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தலைவர் பேரின்பநாயகமவர்கள் முந்தநாள் காலை ராஜ்மோகன் காந்தியை ஹோட்டலில் சந்தித்துப்பேசுகையில் ஒரு முதியான கதையைச் சொன்னார்.

மகாத்மாவுடன் அச்சமயம்கஸ்தூரிபாய், தேவதாஸ் காந்தி (கடைசி மகன்), லட்சுமி (ஹரிஜன வளர்ப்புத் பெண்), ராஜாஜி, ராஜாஜியின் மகன் லட்சுமி முதலியவர்களெல்லாம் வந்திருந்தனர். அப்போது யாழ்ப்பாணத்தில் வைத்துத்தான் தேவதாஸுக்கும் ராஜாஜியின் புதல்வி லட்சுமிக்கும் காதல் பூத்திருக்க வேண்டுமென்று தாம் ஊகித்ததாயும் ஆகவே ராஜ்மோகனின் பிறப்புக்கு யாழ்ப்பாணமே ஒரு விதத்தில் காரணமாக இருக்க வேண்டுமென்றும் பேரின்பநாயகமவர்கள் பெருமையுடன் தெரிவித்த போது, ராஜ்மோகன் புன்னகை செய்துவிட்டு, தாம் சென்னையிலே தமது அன்னையை சந்தித்து, இதைப் பற்றி கேட்பதாயும் அவர் ஊர்ஜிதம் செய்தால் அத்தகவலை உடன்பேரின்பநாயகத்துக்குத் தெரிவிப்பதாகவும் சொன்னதும் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

தேவதாஸ் லட்சுமி இருவரும் விவாகம் செய்து கொள்ள மகாத்மாவின் அனுமதியைக் கேட்டபோது வாலிபத்தில் ஏற்படும்திடீர் உணர்ச்சிகளால் ஒரு முடிவு செய்து விடப்படாதென்றும், ஒருவருஷ காலம் இருவரும் ஒருவரையொருவர் பார்க்கவும் படாதென்றும் கடிதத்தொடர்பும் கூடாதென்றும் ஒருவருஷத்துக்குப் பின்பும் இருவரும்மனம் மாறாமல் இருந்தால் விவாகம் செய்யலாமென்றும் மகாத்மா கூறினாராம். அப்படியே இருவரும் ஒருவருட காலம்பிரிந்திருந்து முதலில் மகாத்மா, கஸ்தூரிபாய் இவர்களது பூரண ஆசியுடன் விவாகம் செய்ததாகத் தெரிகிறது.

0 0 0

'தமிழ்த் தலைவர்களுக்குள்ளாக ஒற்றுமை ஏற்படுவதுவதா? அல்லதுசிங்கள், தமிழ் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையேற்படுத்துவதா? இதில் எது அதிக கஷ்டமானது?'

என்று ராஜ்மோகன்காந்தி கேட்டதற்கு. அந்த யாழ்ப்பாணப் பெரியார் 'தமிழ்த் தலைவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்துவதுதான் அதிக கஷ்டம்' என்றார்.

[10ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அபேட்சகர்களும் அவர்கள் திட்டங்களும்

'யோகி'

12-ம் வட்டாரம்

திரு. ஏ. நடராசா (சுயேச்சை)

யாழ். மாநகரசபையில் மூன்று தடவைகள் அங்கத்துவம் வகித்திருக்கிறார். ஒரு தடவை உதவி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். சுமார் 30 வருட காலமாக வைத்தியத்தையே தமது தொழிலாகக்கொண்டு மக்களுக்கு சேவைசெய்து வருகிறார். ஆயுள் வேத வைத்தியத்தில் நல்ல அனுபவம் நிறைந்த இவர் ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்து, ஏழைகளின் நண்பன் என்ற பெயரைப்பெற்றுள்ளார். எல்லோருடனும் அன்பாக பழகக்கூடியவர். இவரது முயற்சியால் இவரது வட்டாரத்தில் பிரசவவிடுதி யொன்று ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் இவருக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கியுள்ளதே இவரின் சேவை மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது. தற்பொழுது இவருக்கு வயது 50. வெள்ளப்பெருக்கின்போது தமது வைத்தியசாலையில் ஏழைகளுக்கு தஞ்சம் அளித்தார். நல்லூர் முத்தமிழ்நாவலர் சனசமூக நிலையம், நல்லூர்சங்கிலியன் மன்றம் போன்ற பல பொது ஸ்தாபனங்களில் முக்கிய பங்குகொண்டு சமூகத் தொண்டுபுரியும் இவர் பல கோவில் திருப்பணிகளிலும் முக்கிய பங்குகொண்டவர். தமிழ்க்காங்கிரஸ் அனுதாபியான இவர் சுயேட்சையாகவே போட்டியிடுகின்றார். வட்டார மத்தியில் ஒரு அரசினர் மருந்தகம் அமைத்தல், நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, ஆடியபாத வீதி, கோவில் வீதி ஆகியவற்றுக்கு பஸ் சேவையை விஸ்தரித்தல், வட்டாரத்தில் நிரந்தர வடிகாலை அமைத்தல், மின்சார விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தனது திட்டம் என இவர் கூறுகின்றார்.



எம். ஆலாலசுந்தரம் (தமிழரசு)

தமிழரசுக் கட்சியின் உள்ளமைப் போராட்டங்களில் பங்குபற்றி மேடைப் பேச்சில் வல்லவராக விளங்கி வரும் இவர் ஒரு வழக்கறிஞர். இலங்கை பஸ் தொழிலாளர் சங்க செயலாளராகவும், யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் சமாஜம், துறைமுகத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும், போக்குவரத்து தொழிலாளர் சங்க செயலாளராகவும் இருந்துவரும் இவர் நாடகங்களை தயாரித்து மேடையேற்றியிருப்பதுடன் சிலவற்றில் நடித்துமிருக்கிறார். முதல்தடவையாக போட்டியிடுகிறார். வயது 30 சென்னை பல்கலைக்கழக பட்டதாரியான இவர் கடந்த 4 வருடங்களாக வழக்கறிஞராக தொழில் பார்த்து வருகின்றார். இளைஞரிலிருந்தே தமிழரசுக்கட்சி மீது பற்றுக்கொண்டு கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் ஒரு அடி அடிப்படை இளைஞர். கட்சியின் உதவி காரியதரிசியாகவும், பிரசாரக்குழு உறுப்பினராகவும் இருந்துவருகிறார். தொழிலாளர்களுக்காக வாதாடி பல வழக்குகளில் வெற்றியும்பெற்றுக்கொடுத்திருக்கிறார். தீவிரமான அரசியல்வாதி.

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இங்கு ஒரு பாலர் பகல் விடுதியை முதலில் அமைப்பதே தனது திட்டம் எனத் தெரிவித்தார். இவர் தனது திட்டம் பற்றி மேலும் தெரிவித்ததாவது!

இப்பகுதிக்கு நிரந்தரமான வடிகால்திட்டம் ஒன்று அமைக்கப்படல்வேண்டும். சுகாதார நடவடிக்கைகளின் முதல் கட்டமாக சகல குளக் கரைகளையும் துப்புரவாக்கவேண்டும். நல்லூர்ப்பகுதிக்கென தனியாக 2 "ட்ரான்ஸ்போமர்" அமைப்பித்து மின்சார விநியோகம்செய்ய நடவடிக்கை எடுப்பது. பொதுமக்கள் வசதிக்காக வைத்தியசாலைகள், சந்தைகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை உடன் அமைத்தல், சகல வீதிகளுக்கும் ஒழுங்கைகளுக்கும் மின்சார விநியோகம் செய்தல்.

திரு. பி. தர்மலிங்கம் (சுயேச்சை)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவரான இவர், இந்தியா சென்று யோக்கர் பொறியியல் கல்விகற்று இருக்கிறார். சேவை மனப்பான்மையுள்ள இவர் இளைஞர்களின் பூரண ஆதரவுடன் இத்தேர்தலில் போட்டியிடுகிறார், நல்லூர் வட்டாரத்தில் நன்கு அறிமுகமான இவர் தொண்டு செய்யவேண்டுமென்ற நல்லெண்ணமுடையவர். கட்சி சார்பில்லாதவர். தற்பொழுது வயது 28. முதல் தடவையாகப் போட்டியிடுகிறார். சமரசசாதனை இவர் நல்லூர் வாலிபர்முன்னணி சனசமூகநிலையம், மற்றும் பல ஸ்தாபனங்களில் முக்கிய பதவிவகித்து வருகிறார். சிலகாலம் ஒரு தொழிற்கல்விநிலையத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியிருக்கிறார்.

23 வட்டாரங்களுக்கும் வாரப்பச்சம் பார்க்காமல் நேர்மையுள்ள ஒரேமாதிரியான சேவைகளைச் செய்யக்கூடிய மேயரை 3 வருடமும் நீடித்துவைக்கவேண்டுமென்பதே என்விருப்பம் என்று திரு. தர்மலிங்கம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

முதலாவதாக எனது வட்டாரத்தில் சுகாதார வசதிகளைச் சீர்செய்வேன். யாழ் நகரில் உருவாக இருக்கும் நவீனசந்தை அமைப்பதற்கு முழு மனதுடனும் ஒத்துழைப்பேன், ஒழுங்கைகளுக்கு தார்போட்டு மின்சாரவசதியும்செய்துகொடுப்பேன். வடிகால்களை அமைத்து வெள்ள அபாயத்தை நீக்குவேன். சந்தை வசதிகளைச் சீர்செய்வேன். குழாய் நீர் விநியோகத்தை விஸ்தரிப்பேன். இத்திட்டம் அமுலுக்குவரும்வரை லொறி மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய முயற்சிசெய்வேன். போக்குவரத்து வசதியை சீர்படுத்துவேன். வேற்றுமைபாராத வழமையான இலஞ்சமற்ற நிர்வாகத்தை அமைப்பதற்கு முயற்சிப்பேன்.

மலேரியா இல்லையாம்

புத்தூர், விளாழல்

ஆவரங்கால் பகுதியில் மலேரியா நுளம்பினால் ஆபத்து உண்டாகி வருவதாகவும் இதனை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோப்பாய் சுகாதாரப் பகுதியினரை ஆவரங்கால் கிராம முன்னேற்றச்சங்கம் கடந்த 5-ம் திகதி கடிதம் மூலம் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, சுகாதாரப் பகுதியினரின் ஆராய்ச்சியின் படி இப்பகுதியில் மலேரியா நுளம்பு இல்லையென்றும் எனவே இப்பகுதிக்கு மலேரியா தடுப்பு மருந்து தெளிப்பதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் சுகாதாரப்பகுதியினர் ஆவரங்கால் கிராம முன்னேற்ற சங்கச்செயலாளருக்கு அறிவித்துள்ளனர்.

இப்பகுதியில் சிலர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதுகுறிப்பிடத்தக்கது.

3 வருடமாக மதகு திருத்தப்படவில்லையாம்

சுழிபுரம், விசா

சுழிபுரம், தெல்லியான் 1-ம்மதவு கடந்தமூன்றுண்டு காலமாகத் திருத்தப்படாமல் இருப்பதால் இப்பகுதியை சுற்றினாலும் மக்கள் அவல நிலைக்குள்ளாகின்றனர். 5-ம் வட்டாரத்தில் வாழும் மக்கள் இதனால் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளனராம்.

இதுசம்பந்தமாக கடந்த வருடம் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் என்ஜினியரைக் கூட்டிவந்து நிலைமையை நேரில் காண்பித்தார் ஆனால் அதற்குப்பிறகு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

இதுபற்றி அப்பகுதி மக்கள் உள்ளூராட்சி அமைச்சுடன் தொடர்புகொண்டுள்ளனர்.

இன்றைய பலன்

வெள்ளிக்கிழமை

22-11-68

கார்த்திகை 7 உ.

திதி- துதியை பகல் 9-44 மேல் திருதியை.

நட்சத்திரம்- கேட்டை பகல் 8-50 மேல் மூலம்.

ராகுகாலம்- 10 40—12-10.

சுபநேரம் - 6-10 — 7-40.

இன்று பிறந்தவர்களுக்கு— மகிழ்ச்சிகரமான காலம் உதயமாகி விட்டதென்றே கூற வேண்டும். கடந்த ஆண்டின் தொல்லைகள் இவ்வாண்டு மறையும். உடல் நலம் திருப்திகரமாக இருக்கும். இல்வாழ்க்கையில் புதுமனை கட்டும் முயற்சி மேற்கொள்ளப் படலாம். இலகுக்கு வாகன சுகமுண்டு. கடற்தொழிலாளர்களாயின் மிகவும் கவனமாக நடந்துகொள்ளவும், தந்தை வழியால் ஆதரவு பெருகும், பிள்ளைகளின் முன்னேற்றம் உங்களுக்குக் கௌரவத்தைத் தேடித் தரும். சுற்ற வட்டாரங்களில் உங்கள் செல்வாக்கு வளரும்.

மேஷம் - பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.
ரிஷபம் - அன்பரிடம் நிழலாட்டம், துயரி படிந்த நாள்.
மிதுனம் - இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்.
கடகம் - நண்பர் ஒருவர், சாவியாரி விடக்கடும்.
சிம்மம் - தந்தையின் ஆதரவு, தனமும் சேரும்.
கன்னி - இடம் மாறும் நினைப்பு, புதிய சூழ்நிலை.
துலாம் - தேவைக்கேற்ப பணம், அமைதி வாழ்வு.
விருச்சிகம் - தொழில் புரியும் இடத்தில் விழிப்புடன் இரு.
தனுசு - அடி சறுக்கும், ஆணவத்தை அடக்கு.
மகரம் - திடீர் திருப்பம், திரவிய இலாபம்.
கும்பம் - தடைகள் நீக்கும், தாமத மிகுதி.
மீனம் - அன்னை மொழி அமிர்தம், அமைதியுடன் இரு.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 திருப்பாடல்கள், 7-30 பண்ணும் தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பஜனை, 6-45 நாடோடிப்பாடல்கள், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 தானவரத் தியக்கச்சேரி, 10-00 நேயர் விருப்பம்.

ஆவரங்கால் கி. மு. சங்க தீர்மானங்கள்

புத்தூர், விளாழல்

ஆவரங்கால் கி. மு. சங்கம் திரு. க. சின்னத்துரையின் தலைமையில் கூடியபோது, சிரமதானமூலம் கிராமத்தை அபிவிருத்திசெய்வதென்றும், சிரமதான வேலையில் அங்கத்தவர்கள் பூரணமாக ஒத்துழைக்கவேண்டுமென்றும், குற்றச்செயல்களைத் தடுக்கவென தொண்டர்கள் பத்துப்பேரைத் தெரிவதென்றும் தெரிவு செய்யப்பட்டவர்களில் மூவரைப் பொலிஸாருக்கு உதவியாக அனுப்புவதென்றும், இப்பகுதியில் மலேரியாத் தடுப்பு மருந்து தெளிக்கவேண்டுமென சுகாதாரப் பகுதியினரைக் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், இந்துக்களின் புனித தலமான கோணேசர் ஆலயம் பகுதி சார்ந்த பிரதேசம் கோட்டையை புனிதநகராக்கும்படி கேட்டு "ராஜேந்திரா கமிட்டி"க்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பிரயாணிகள் சங்கம் கோரிக்கை

ஊர்காவற்றுறை, விசா.

புங்குடுதீவு இறுப்பிட்டிக்கும் நயினாதீவுக்குமிடையே தற்பொழுது இயங்கிவரும் இயந்திரப்படகுச்சேவையை குறிகாட்டுவான் நயினாதீவுக்கு மிடையே நடத்தவேண்டுமென போக்குவரத்து அமைச்சை நயினாதீவு பிரயாணிகள் சங்கம் கேட்டுள்ளது.

கிழக்கிலங்கை
கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

மாணவர்
அப்பியாசப் புத்தகங்கள்

அப்பியாசப் புத்தகங்கள் சம்பந்தமாக 1968-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கு அங்கீகரிக்கப்பட்ட கடதாசி வியாபாரிகள், ல. தே. க. ச. சமாசங்கள், மற்றும் இக்கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள சில்லறை எழுதுகருவி விற்பனையாளர்கள் சகலரினதும் கவனம் கோரப்படுகின்றது. ரூபா 10,000 பெறுமதிக்கு மேல் செய்யப்படும் எந்த ஒரு தனியான அப்பியாசப் புத்தகக் கொள்வனவிற்கும் மொத்தவிலையில் 5% விசேட தொகைக் கழிவு தொடர்ந்து 1968 டிசம்பர் 15-ம் திகதிவரை கொடுக்கப்படும்.

தலைவர்
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

135, யூனியன் இடம்,
கொழும்பு-2,
16-11-68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தகாண்டம்

சுழிபுரம், வியா. சுழிபுரத்தைச் சேர்ந்த கலாபரசிங்கம் நிஷா. வயது 28 என்பவரே வெளிய புரவணத்திலுள்ள யுத்தகாண்டம் என்னும் பகுதிக்கு விளக்க உரை எழுதி நூலாக வெளியிட ஏற்பாடுகள் செய்துகொள்ளார்.

ஒய்வு பெறுகிறார்

சுகாதாரத்துறை, வியா. பாம்பாலை வைஷ்ட தொழில்நுட்பப் பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தற்போதைய அதிபர் திரு. பி. நாகலிங்கம் இரும்பு பாலையைத் தொடர்ந்து பிரஸ்தாப பதவி காலியாக வுள்ளது

மாணவருக்கு வளி மருந்து

புங்குடுதீவு, வியா. நெஞ்சுப்புச் சுவ்சலுக் கான தலை வலி மருந்து வடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரெழு ஸ்ரீ வேசை வித் தியசாலை மாணவர்களே சுமார் 200க்கு அதிக மருந்துக்கு போடப்பட் டுள்ளது.

ஷெல் ரசாயனப் பொருட்கள்
பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனபபொருளை இனையுங்கள், ஷெல்லை இனையுங்கள
'அலறெக்ஸ்', 'மல்றெக்ஸ்' 20, 'மூல்றெக்ஸ் எக்ஸ்ட்ரா', 'ஆர் கொடன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தி யன்', ஷெல் கூப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப-34, 'றெமலின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட் களில் சில மாத்திரமே.

2918

எப்பயிர்க்கும் உயிவுண்டாம் உயினிலை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி யன்ன வாயிக்காரெனில்.

AGENTS

ரேயல் டிஸ்பென்ஸரி

PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை பாடசாலைகள்

தெரிவு கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், கேகாலி இலங்கை பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாண மத்திய பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் யாழ். மாகாணத்தில் தலைமைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், இலங்கை பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டி வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி இடைவேளைவரை யாழ். பாடசாலைகள் கோஷ்டியே வீரவேட்டை வேகமாக விளையாடியது. இக் கோஷ்டியில் பிரணி வீரர்களும் முப்படை வீரர்களும் ஒன்று சேர்ந்து எதிர் கோஷ்டியின் கோல் எல்லையை நோக்கி முன்னேறிய போதிலும், கோல்கள் எதுவும் போடாமலே இருந்தனர். இடைவேளைக்கு முன் பல தடவைகள் இலங்கை பாடசாலைகள் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் கோல்போட சென்று செற்ற போதும், யாழ் பாடசாலைகள் கோஷ்டியின் கோல்காப்பு வீரர் செல்வச் சந்திரன் மிகவும் திறமை யாக தடுத்து நிறுத்தி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். இடைவேளையின் போது இரு கோஷ்டியும் கோலெதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின்னும் பல தடவைகள் யாழ் பாடசாலைகள் கோஷ்டியினர் கோல்கள் போடும் இலகுவான சந்தர்ப்பங்களை நழுவ விட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும் போது யாழ். பாடசாலை கோஷ்டியின் பிரணி வீரர்களில் விளையாடிய சோர்வு காணப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் இலங்கை பாடசாலைகள் கோஷ்டியின் முன்னணி வீரர் ஜயா அடித்தடித்த இரு கோல்களை மிக லாவகமாகப் போட்டு 2—0 கோல்களால் யாழ். பாடசாலை தெரிவுக் கோஷ்டியை தோற்கடித்தார்.

இலங்கை பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டியினர் இடையாழ். பாடசாலை தெரிவுக் கோஷ்டியினர் தரும் விளையாடிய போதும், முன்னணி வீரர்களிடம் கோலடிக்கும் திறமை இல்லாமையினாலே, யாழ். பாடசாலை தெரிவுக் கோஷ்டியினர் தோல்வியுற்றனர்.

இப் போட்டிக்கு திரு. சுமையாக மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [ந. நி

தீவுப்பகுதி உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, வியா. தீவுப்பகுதி உதைபந்தாட்டச் சங்கத்தினரால் நடத்தும் மெய்ட அமரர் திரு. இ. நல்லதம்பியி ஜே. பி. யின் வெற்றிக் கேடயத்துக் கான 'பி' பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டி ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டியினருக்கும், வேலணை சனசமூக நிலைய 'பி' பிரிவுக் கோஷ்டியினருக்குமிடையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகக் கோஷ்டியினர் 6—0 கோல்களால் வெற்றியீட்டினர். இப் போட்டிக்கு தீவுப்பகுதி விளையாட்டு உதைபோசகர் திரு. கோலுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இதன் பின் தீவுப்பகுதி 'லெய்டன்' வெற்றிக் கேடயத்திற்கான 'ஏ' பிரிவுக் போட்டி நடைபெற்றது. போட்டி புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது. ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகக் கோஷ்டியினரும் புங்குடுதீவு லெய்டன் விளையாட்டு சனசமூக நிலைய கோஷ்டியினரும் மோதினர். ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழக கோஷ்டியினர் 9—1 கோல்களால் லெய்டன் 'ஏ' பிரிவுக் கோஷ்டியை தோற்கடித்தனர். திரு. முகை இப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமை யாற்றினார்.

இடமாற்றம்

முல்லைத்தீவு, வியா. முல்லைத்தீவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. வி. எஸ். தர்மரத்தினம் ஜனவரி முதலாம் திகதி முதல் கண்டி பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுத் தபாலதிபர் திரு. எ. ஸ்ரைத்தினம் ஜனவரி முதல் பதவியுயர்வு பெற்று யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்க இனத்துவேஷத் திருச்சபை கண்டனம்

டர்பன், நவ. 21

தென்னபிரிக்காவில் அதிகரித்துவரும் திருச்சபைமாநாடு ஒன்றுக்கு இடம்பெற்றுள்ள இனத்துவேஷத்தைக் கண்டித்திருக்கிறது. இனத்துவேஷம் கிறிஸ்தவநெறி முறைகளுக்கு எதிரானதென்றும் அது கருத்தை வெளிப்படுத்தி.

கலவரம் ஒன்றில்

தனவெட்டி, வியா. கரு, கலாசார. இலக்கியம் ஆகியவற்றை ஆராய்ந்து செய்யும் நோக்கமாக ஆரம்பிக்கப்பட்ட ஓர் கண்காட்சி மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அங்கு நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்: சோஷலிச தொழிலாளர் ஜனநாயகத்தினம், அதிபர் கலைப்பீட மாணவர் சங்கத் தலைவர், எஸ். சதீஸ்வரன் தம்பி, பேராளர்கள்: நா. ஸ்ரீ கேதீஸ்வரன், சோ. சிவசிதம்பரம், பொருளாளர்: நா. ஆறுமுகம். எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பு செய்யப்பட்டது.

புதிய நிர்வாகிகள்

உரும்பராய், வியாழன் உரும்பராய் பிறதேசை சேர்ந்த இளைப்பிள்ளை நிர்வாக அங்கத்தினர்களில் கூட்டம் நேற்று முன்தினம் நடை பெற்றபோது பின்வருவோர் புதியதாக உத்தியோகத்தர் களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. செ. இராசகுமார், உபதலைவர்: திரு. பா. சண்முகநாதன், செயலாளர்: திரு. ம. இரத்தினஜோதி, உப செயலாளர்: திரு. கு. அருள்பரன், தலைவர்: செ. மோகனதாஸ்.

ரயில் கொள்ளைக் கோஷ்டி

கைது

மீண்டும் கொள்ளையில் ஈடுபட திட்டமிட்டனராம்

வவுனியா, விசேட.

துப்பாக்கி முனையில் ஓடும் ரயிலில் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கருதப்படும் நால்வரை நேற்று மன்னார்-கொழும்பு ரயிலில் வைத்துப் புகையிரதப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கைது செய்தனர். ரயிலில் மதுபானம் அருந்திக்கொண்டிருந்தவேளையில் கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து இரு ரிவோல்வர், சுழல் துப்பாக்கி ரவைகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டனவாம்.

சமீபத்தில் இதே ரயிலில் துப்பாக்கி முனையில் ஒரு பெண்ணிடமிருந்து தாலிக்கொடியையும் பணத்தையும் கொள்ளையடித்ததாகத் தேடப்பட்டுவந்த நால்வரும் நேற்று நள்ளிரவு 1 மணிக்கு அனுராதபுரத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு வவுனியா மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட கழு பண்டா, தர்மசேன பியதாச லயனல். ஆகிய நால்வரையும் ரயிலில் தாலிக்கொடியைக் களவுகொடுத்த அடம்பனைச்சேர்ந்த பாஞ்சாலி இன்று நடைபெற்ற அணிவகுப்பில் அடையாளம்காட்டினார். இவர்கள் நால்வருமே தன்னிடம் கொள்ளையடித்ததாக பாஞ்சாலி தெரிவித்தார்.

மதுபோதையிலிருந்த இவர்கள் இன்றிரவும் அதே ரயிலில் வேறுகொள்ளையில் ஈடுபடத் திட்டம் போட்டுக் கொண்டிருந்ததாக பொலிசார் கருதுகின்றனர். வேறுபல கொள்ளையில் ஈடுபாடுடையவர்களாகக் கருதும் இக்கோஷ்டிக்கு கழு பண்டா என்பவர் தலைமை வகித்துக் கொள்ளவாராம்.

வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் இக்கொள்ளை பற்றிய விசாரணைகளை மேலும் நடத்துகின்றார். கைது செய்யப்பட்ட நால்வரும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார இலாகா புறக்கணிக்கிறதாம்

சுன்னாகம், விசேட.

"வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, உடுவில் ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளின் எல்லையிலிருந்தும் இம் மூன்று தொகுதிகளுக்கும் சேவைசெய்யவேண்டிய நிலையில் இருப்பதுமான சுன்னாகம் அரசினர் வைத்தியசாலை சுகாதார இலாகாவினால் புறக்கணிக்கப்பட்டுள் நிலையிலிருப்பது வேதனைக்குரியது."

இவ்வாறு சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள ஓர் அவசரக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பட்டினசபைத் தலைவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: முன்னாள் சுகாதார அமைச்சர் திரு எம். டி. எச். ஜயவர்த்தனா இவ் வைத்தியசாலைக்கு விஜயஞ்செய்தபோது இவ் வைத்தியசாலையை தரம் உயர்த்த வேண்டுமென்றும் மேலதிக வைத்தியகலாநிதிகள் தாதிகள் ஏனைய ஊழியர் ஆகியோர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தோம்; அவ்வாறு செய்வதாக அமைச்சர் வாக்களித்தார். இன்னும் எதுவித முன்னேற்றமுமில்லை.

தாங்கள் பதவியேற்றபின் குறைந்தது நாலு தாதிகளையும் மேற்றன் ஒருவரையும் விசேட ஒருவரையுமாவது நியமித்துத் தரும்படி கேட்டோம். ஆனால் செய்வதாகக் கூறப்பட்டது. ஆனால் இதுவரை தாதிமாரோ மேற்றனோ நியமிக்கப்படவில்லை. இதே காலத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு இவ் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இவ் வைத்தியசாலைக்கு உடனடியாக ஒரு பிரேத அறை கட்டப்படவேண்டுமெனக் கோருகிறோம். நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கட்டிடவேலைகள் உடனடியாக ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் இவ்வேலைகள் தொடங்கவில்லை.

மிகமுக்கியமான வைத்தியசாலையின் வசதிகள் கூட்டப்பட வேண்டும் என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்களென நம்பி உடனடியாக சுன்னாகம் வைத்தியசாலைக்கு தாதிகளை நியமித்துத் தரும்படி வேண்டுகிறோம்.

இவர்கள்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வார்த்தை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, வேலை நிறுத்த முஸ்தீபுகள் நடைபெற்றுவருகின்றன.

இதற்கிடையில் இராணுவ கட்டுப்பாட்டுப் பொலிஸ் படைத்தலைவர்களுடன் பிரதமர் நேற்றிரவு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் சட்ட ஒழுங்குகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தினார். அத்துடன் நேற்றிரவு தமது 'லூ லாவின்ஸ்' இல்லத்தில் நிதி மந்திரியையும் நிறைவேற்று உயர் அதிகாரிகளையும் சந்தித்து இது சம்பந்தமான பேச்சுவார்த்தையை மேற்கொண்டார்.

அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால அலவன்ஸ் வழங்குவது பற்றி இப்போது ஆலோசிக்கப்படுகின்றது. 28-ம் திகதி வேலைநிறுத்தம் நடைபெறுமென்பதால் நாட்டின் சகல பகுதிகளிலும் முப்படைகளினதும் பலத்த கண்காணிப்பு ஏற்பாடுகளை செய்வதற்கான நடவடிக்கைகளும் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுவீப்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

05 X 0835	28 N 0404
35 O 0596	41 R 0011
07 B 0741	01 J 0685
39 R 0419	09 G 0956
30 M 0286	40 B 0525
20 J 0372	02 B 0288
19 L 0935	35 V 0505
09 Q 0941	20 M 0628
38 D 0235	19 J 0198
42 U 0392	24 D 0974
17 Z 0790	26 P 0946
05 Y 0988	25 G 0850
01 Q 0958	26 C 0720
11 R 0035	17 H 0417
29 B 0244	45 H 0333
10 F 0190	34 K 0471
38 F 0553	39 D 0191
07 E 0917	34 Z 0081
14 S 0929	38 C 0134
42 E 0980	35 Z 0176
45 H 0813	26 F 0772
09 O 0164	11 R 0812
30 T 0293	05 K 0745
19 N 0492	14 C 0686
41 M 0942	17 D 0718
16 Z 0161	19 H 0888
23 A 0865	35 B 0251
36 Q 0446	29 T 0635
25 K 0255	27 V 0836
28 Y 0322	45 Q 0427
25 V 0813	02 Z 0793
23 E 0207	26 P 0337
42 G 0309	44 B 0851
40 C 0878	22 C 0729
45 H 0484	36 V 0938
09 U 0042	35 F 0688
44 Z 0618	01 J 0753
04 E 0587	12 A 0857
18 R 0045	16 F 0065
30 X 0306	19 Q 0298
35 D 0261	37 B 0444
18 H 0831	22 F 0578
08 W 0238	45 S 0149
24 T 0392	41 X 0861

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்)

யாழ். நீதிமன்றத்தில்

கள்ளக் கையெழுத்திட்டாராம் பொலிசாரால் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி.

நீதிமன்றத்தில் ஆள்மாறாட்டம் செய்ததாகக் கூறப்படும் ஒருவரை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வைத்து பொலிசார் கைதுசெய்தனர்.

இன்னொருவரது பெயரில் செலுத்தப்பட்டிருந்த பிணைப்பணத்தை அவரது பெயரில் கள்ளக் கையெழுத்திட்டுப் பணமெடுக்க முனைந்தபோதே இவரை நீதிமன்ற அலுவலகத்தில் வைத்துப் பொலிசார் கைதுசெய்தனர். அருளம்பலம் சுந்தையா என்பவரது கையெழுத்தை வைத்துப் பணம் பெற முயன்ற கதிர்காமர் என்பவரே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

இந்த ஆள்மாறாட்டச் சம்பவம் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஒரே வாரத்தில் நடைபெற்ற இரண்டாவது சம்பவமாகும். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய விசேஷ குற்றத்தடுப்புப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. துரைசிங்கம் இது பற்றிய விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

ஆள்மாறாட்டம் செய்ததாகக் கூறப்படும் நபருக்கு எதிராக பொலிசார் வழக்குத்தாக்கல் செய்யவிருக்கின்றார்கள். (ஈ. நி.)

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள பேர்ட் பிரிபெக்ட் BN 3000 தொடர்பிலக்கமுள்ள கார் விற்பனைக்குண்டு. விலை ரூபா 11500 டாரும்ஸ், 54, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

164

விக்ரோறியாக் கல்லூரி

புதிய மாணவர் பிரவேசம் 1969.

விண்ணப்பங்கள் 30-11-68 வரை அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும். முன்பு விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்கவும்.

க. சிவசுப்பிரமணியம்
சுழிபுரம். அதிபர்.
21-11-68 767

மரண அறிவித்தல்

வெள்ளாந் தெருவைச் சேர்ந்த வைத்தியர் நா. சிவநேசதுரையின் அருமை மனைவியும், க. நாகேஸ்வரியின் தாயாரும், யாழ். றேடிங் கம்பனி உரிமையாளர் மா. கனகரெத்தினத்தின் சாமியாருமாகிய சி. காமாக்ஷி காலமாகி விட்டார். அவரது பூதவுடல் சுவமக்கிரியைக்காக இன்று (22-11-68) வெள்ளிக்கிழமை மு. ப. 11 மணிக்கு வெள்ளாந் தெருவிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கிளுவணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

165

புதிய தூதுவர்

கொழும்பு, விசேட.

லண்டனில் இலங்கை ஹைகமிஷனராக இருக்கும் சேர் லலித ராஜபக்ஷ இலங்கை திரும்பியிருப்பதால் இவருக்காக தற்போது மாஸ்கோவில் இலங்கைத் தூதராகக் கடமையாற்றும் திரு. எம். எ. பி. பிரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிசார் கைப்பற்றினர்

அளவெட்டி, விசேட.

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் என்ஜினியரைக் கடமையாற்று வீட்டிலிருந்து களவு போனதாகக் கருதப்படும் பொருட்களை காவிட்டபுரத்தில் உள்ள ஓர் நிலையத்தில் வைத்து காங்கேசன்துறை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இதுசம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ்விசாரணை தொடர்கிறது.

பல்கலைக் கழக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உரை ஆகிய நூல்களே பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பாடத்துக்கு இப்போது தெரிவுசெய்யப்பட்ட நூல்களாகும்.

இந்நூல்களுக்குப் பெருந் தட்டுப்பாடிருந்தும் இவை இந்தியாவிலிருந்து வருவித்து விற்பனைசெய்ய அரசாங்கம் முன்வராதிருப்பது பற்றி பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர். (ஈ. நி.)

அடிப்படை......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மாதம் 28ம் திகதி வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ள அரசாங்க ஊழியர்களின் கோரிக்கையின்படி மாதம் 40 ரூபா சம்பளம் கூட்டினால் வருடமொன்றுக்கு அரசாங்கத்திற்கு மேலும் 229 கோடி ரூபா தேவைப்படுமாம். ஆனால் சம்பளத்தைக் கூட்டாமல் அடிப்படைச் சம்பளத்தைக் கூட்டி பென்ஷன் அதிகரிப்பதால் வருட மொன்றுக்கு 70 கோடி ரூபா மட்டுமே செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பலப்பிட்டி இடைத்தேர்தல் நியமனம் தாக்கல்

பலப்பிட்டி, விசேட.

பலப்பிட்டிய இடைத்தேர்தலுக்கான அபேட்சக பத்திரங்கள் இன்று காலி அரசாங்க செயலகத்தில் வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்டபோது இரண்டுபேர் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் பி. டி. டபிள்யூ. டி. சில்வாவும், ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் திரு. லக்ஷ்மன் டி. சில்வாவும் போட்டியிடுகின்றனர். 44,443 வாக்காளரைக் கொண்ட இத்தொகுதியில் 46 வாக்களிப்பு நிலையங்களில் டிசம்பர் மாதம் 17ந் திகதி தேர்தல் நடைபெறும்.

இத் தொகுதி முன்னாள் அங்கத்தவர் தனது ஸ்தானத்தை இழந்தமையினால் இவ் இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

நாளை கூடும் மந்திரிசபைக் கூட்டத்தில் அரசாங்க ஊழியர் இடைக்கால அலவன்ஸ் பற்றியும் முக்கியமாக ஆராயப்படுமெனவும் தெரிகின்றது.

தென் வியட்னும் இணக்கம்

சைகோன், நவ. 21

பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தென் வியட்னும் இணக்கந்தெரிவித்துள்ளது. தென் வியட்னுமின் இம்முடிவால் வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஒரு புதிய மாற்றம் ஏற்படுமென அவதானிகள் தெரிவித்தனர்.

சதிவழக்கின் 17வது எதிரி விடுதலை

கொழும்பு விசேட.

சதிவழக்கின் 17வது எதிரியான ஹென்றி சிங்கோ இன்று விடுதலை செய்யப்பட்டார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் கம்பனிக்காக யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org